தேவநேயப்பாவாணரின்

கிறித்தவக் கீர்த்தனம்

செ.திவான்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

தேவநேயப் பாவாணரின்

கிறித்தவக் கீர்த்தனம்

பதிப்பாசிரியர்

செ. திவான் எம்.ஏ., எம்.ஃபில்.,

வள்ளல் வைகோ நூலகம்,
106-F/4A திருவனந்தபுரம் சாலை,
பாளையங்கோட்டை – 627 002
திருநெல்வேலி மாவட்டம்.
✆ 0462 - 2572665

ஆசிரியரின் 81–ஆவது நூல்

முதற் பதிப்பு : ஜனவரி 2010

கணினி வடிவமைப்பு : நாள்சி கணினியகம், பாளையங்கோட்டை

அச்சிட்டோர் : சிவசக்தி அச்சகம், சிவகாசி.

முகப்போவியம் : N. சங்கர் கணேஷ்.
K. முருகன், காசி கிராபிக்ஸ், பாளையங்கோட்டை

உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன்

என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்;

என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன்

என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்.

(மத்தேயு 10: 40)

நீங்கள் படும் துன்பங்களால்

எவரும் மனந்தளர்ந்து போகாதவாறு,

உங்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தி

உங்களை ஊக்குவிக்க

அவரை அனுப்பினோம்.

(1 தெசலோனிக்கர் 3: 2-3)

எண்ண அலைகள்

(பதிப்புரை)

அன்னைத் தமிழ், 'ஆரிய மொழிக்கு மூலம் "திராவிட மொழி"களுக்குத் தாய்' என்று நிறுவியவர் தேவநேயப் பாவாணர்; கோடி கொடுத்தாலும் கொள்கை தவறாதவர். பன்மொழிக்கடல், பண்பாட்டின் பெட்டகம், மொழி ஞாயிறு, இணையற்ற மொழி மீட்பர், தமிழ்ச் சொற் பிறப்பியல் ஆய்வுப் பேரறிஞர், தனித்தமிழ் இயக்கத்தின் தன்னேரில்லாத தலைவர்.

பெரியார் என்றால் ஈ.வே.ரா. அறிஞர் என்றால் அண்ணா. பாவேந்தர் என்றால் பாரதிதாசன்.பாவாணர் என்றால் தேவநேயன்.

டாக்டர் கா. காளிமுத்து

"உலக முதன்மொழி தமிழ்; இந்திய மொழிகளுக்கு மூலமும் வேரும் தமிழ்; திரவிட மொழிகளுக்குத் தாய்மொழி தமிழ் என்று வாழ்நாள் முழுவதும் ஆய்வு செய்து நிறுவிய செம்மல். உலகின் முதன் மாந்தன் தமிழன் என்பதும், தமிழன் தோன்றிய இடம் குமரிக் கண்டமே, மொகஞ்சதாரோ, அரப்பா நாகரிகம் பழந்தமிழ் நாகரிகமே என்பதும் தேவநேயப் பாவாணரின் ஆய்வுப் புலத்தின் இரு கண்களாகும்" என்பர் டாக்டர் கா.காளிமுத்து.

தமிழரின் தொன்மையை உலகுக்கு அறிவித்தவர் பெருந்தகை கால்டுவெல்; தனித்தமிழுக்கு வித்திட்டவர் பரிதிமாற் கலைஞர்; செடியாகத் தழைக்கச் செய்த செம்மல். நிறை தமிழ் மலையாம் மறைமலையடிகள்; அதை மரமாக வளர்த்து மாண்புறச் செய்தவர் தேவநேயப் பாவாணர்.

வாகைக்குளம்

தென்பாண்டிச் சீமை; அன்றைய திருநெல்வேலி மாவட்டம்; 19-ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி; கோயில்பட்டிக்கும் சங்கரன் கோயிலுக்கும் இடையில் வாகைக்குளத்தில் தோக்கசு (Stokes) என்ற மேனாட்டுக் கிறித்தவர் வாழ்ந்து வந்தார். அவர் கோயில்பட்டியிலும் இருந்துள்ளார். அவரது வளமனைக் காவலர் முத்துசாமி.

பனவடலி சத்திரம்

முத்துசாமி பனவடலி சத்திரத்தைச் சேர்ந்தவர். தேவர்குளம், குருக்கள்பட்டி ஊர்களிலும் உறவு உடையவர். முத்துசாமியின் துணைவியார் வள்ளியம்மாள்.

ஞானமுத்து தோக்கசு

முத்துசாமி - வள்ளியம்மாள் தம்பதியரின் புதல்வராகப் பிறந்தவர் ஞானமுத்து தோக்கசு. சங்கரன்கோயிலில் தொடக்கப் பள்ளியில் ஆசிரியர். களப்பாளங்குளம், பெருங்கோட்டூர் முதலிய ஊர்களில் இருந்து வந்தும் பிள்ளைகள் அவரிடம் பயின்றனர்.

ஞானமுத்து தமது உறவுப் பெண்ணான சொக்கம்மாள் (மரியாள்) என்பவரை மணந்தார். அவரது உறவினர்கள் ஈழத்தில் இருந்ததால் கூடி வாழ விருப்பமின்றி அவ்வம்மையார் அங்கு சென்றுவிட்டார்.

பாண்டவர் மங்கலம்

பாண்டவர் மங்கலத்தில் உபதேசியராக இருந்த குருபாதம் என்பவரின் மகளார் பரிபூரணம் என்பாரை ஞானமுத்தார் திருமணம் செய்தார்.

சங்கரன்கோவில்

ஞானமுத்தர் - பரிபூரணம் தம்பதியருக்கு ஆறு பெண் மக்கள். ஆடவர் நான்கு பேர். 07.02.1902-இல் (திருவள்ளுவர் ஆண்டு 1933 சுறவம் தை 26-ஆம் நாள்) பத்தாவது பிள்ளையாக, (நாலாவது மகனாக சங்கரன்கோவிலில் பிறந்தவர் தேவநேசன். தேவநேயப் பாவாணர்.

ஆம்பூர்

1906 ஞானமுத்து மறைந்தார்; தேவநேசனுக்கு வயது ஐந்து. பின்னர் அவரது அன்னையாரும் மறைந்தார். பத்தாவது பிள்ளையான கடைக்குட்டி தேவநேசன் வடஆர்க்காடு மாவட்டம் ஆம்பூரில் தனது மூத்த சகோதரியின் வீட்டில் வளர்ந்தார். ஆம்பூர், மிசெளரி நல்லஞ்சல் உலுத்தரின் விடையூழிய (M.E.L.M.) நடுநிலைப் பள்ளியில் எட்டாவது வகுப்பு வரை தேவநேயன் படித்தார்.

முறம்பு (சீயோன் மலை)

திருவில்லிபுத்தூர் - சங்கரன்கோவில் நெடுஞ்சாலையில் அமைந்துள்ள முறம்பு என்னும் சீயோன்மலையில் உயர்தரப் பள்ளியின் தாளாளராக இருந்தவர் யங் (Young). இவரின் பொருள் உதவியால், தேவநேயன் மேல்படிப்பைத் தொடர்ந்தார்.

பாளையங்கோட்டை

பாளையங்கோட்டை திருச்சபை விடையூழிக்கழக (C.M.S.) உயர்நிலைப் பள்ளியில் அந்நாளைய 4, 5, 6-ஆம் படிவங்கள் (9, 10, 11-வது வகுப்பு) வரை பயின்று நற்தேர்ச்சி பெற்றார் தேவநேயன்.

தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பலர் முகமதியராயினர்

சீயோன்மலையில் நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராக தேவநேயன் தனது 17-வது வயதில் பணியில் சேர்ந்தார். 1919 - 1921 வரை அங்கு பணியாற்றினார். அங்கு மேல்சாதிக்காரர்களின் கொடுமைக்குள்ளானார். 'குலவேற்றுமைக் கொடுமையினின்று தப்பவே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பலர் முகமதியராயினர்' (முஸ்லிம்களாயினர்) என்றும் அது குறித்து தேவநேயப் பாவாணர் எழுதியுள்ளார்.*

பண்டிதர் மாசிலாமணி

அந்நாளில் 'இவர் தமிழ் கற்பிக்கத் தகுதியுடையவர்' என்று புகழ்வாய்ந்த புலவர் ஒருவர் சான்று வழங்கினார். அதனைக் கொண்டே தமிழாசிரியர் பணியில் அமர்த்தும் வழக்கம் இருந்தது.

பாளையங்கோட்டை சி.எம்.எசு. பள்ளித் தமிழாசிரியர் பண்டிதர் மாசிலாமணி தேவநேயனுக்குச் தகுதிச் சான்றிதழ் வழங்கினார்.

தேவநேசக் கவிவாணர்

தேவநேசக் கவிவாணர் அந்தச் சான்றிதழில் 'தேவநேசக் கவிவாணன்' என்று இவர் குறிப்பிட்டிருந்தார். அப்பெயரே பின்னாளில் தேவநேசப் பாவாணராகி, பின்னர் தேவநேயப் பாவாணராக மாறியது.

---

* தேவநேயன், தமிழர் வரலாறு, முதற் பதிப்பு பிப்ரவரி 1972, இரண்டாம் பதிப்பு சூன் 1991, சென்னை, பக். 326.

1922 - 1924 தாம் பயின்ற ஆம்பூர் பள்ளியிலே ஆசிரியராகப் பணியாற்றினார். தொல்காப்பியம், சொல்லதிகாரம் சேனாவரையர் உரைக்குறிப்பு (Tolkapiyam, Solsena, Notes on commentary) எனும் நூலினை 1923-இல் எழுதினார் பாவாணர்.*

பண்டிதர் தேர்வு

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பிரவேசம் (முதனிலை), பாலபண்டிதம் (இடைநிலை), பண்டிதம் (இறுதிநிலை) என்ற மூன்று நிலைத்தேர்வுகள் உண்டு. 1924-இல் தன்னந்தனியாக இறுதிநிலைத் தேர்வு எழுதி வெற்றி பெற்றார் தேவநேயப் பாவாணர்.

சென்னையில்

சென்னை பிரம்பூர் கலவலகண்ணனார் உயர்நிலைப் பள்ளியிலும், திருவல்லிக்கேணி கெல்லற்று உயர்நிலைப் பள்ளியிலும் தமிழாசிரியராகப் பணியாற்றினார். 1925-இல் சென்னை தாம்பரம் கிறித்தவக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார்.

சிறுவர் பாடல் திரட்டு

1925-இல் கிறித்தவ இலக்கியக் கழகம் (C.L.S.) வழியாக 'சிறுவர் பாடல் திரட்டு' எனும் 32 பக்கங்கள் கொண்ட நூலினை எழுதி பாவாணர் வெளியிட்டார். கடவுள் வணக்கம், இங்கிலாந்து அரசர் ஐந்தாம் ஜார்ஜுக்கு இராஜ வாழ்த்துப் பாடல், தாலாட்டுப் பாட்டு முதலிய 29 பாடல்களைக் கொண்டது இந்த நூல்.

எசுத்தர் பொன்னம்மாள்

கரிவலம்வந்தநல்லூர் அருகே உள்ள புறக்கடையான் பட்டியைச் சேர்ந்த எசுத்தர் பொன்னம்மாளை பாவாணர் திருமணம் செய்து கொண்டார் (1925).

1926

திருநெல்வேலி தென்னிந்திய தமிழ்ச் சங்கத் தனித்தமிழ்ப் புலவர் தேர்வில் 1926-இல் வெற்றி பெற்றார் பாவாணர்.

---

* இரா. மதிவாணன், பாவாணர் ஆய்வு நெறி, பக். 142.

1928-இல் எசுத்தர் பொன்னம்மாள் மறைந்தார். ஒரே ஒரு வயதான தனது குழந்தை மணவாளதாசனை மகப்பேறு இல்லாத இளைய அண்ணனிடம் தத்துப் பிள்ளையாகக் கொடுத்தார் பாவாணர்.

மன்னார்குடியில் பணி – 1929

மன்னார்குடியில் பின்லே (Finlay) உயர்நிலைப் பள்ளியில் பாவாணர் ஆறு ஆண்டு காலம் பணியாற்றினார். அங்கு காவல் துறையில் ஆய்வாளராகப் பணியாற்றியவர் தொல்காப்பியப் பெரும்புலவர் சோமசுந்தரம்.

பெரும்புலவர் சோமசுந்தரம்

'மன்னார்குடியில் காவல் நிலையத்தில் தொல்காப்பியரைக் காக்கி உடையில் கண்டேன்' எனப் பொறியியல் அறிஞர் பா.வே. மாணிக்க நாயக்கரால் பாராட்டப் பெற்ற பெரும்புலவர் சோமசுந்தரத்துடன், 1931-இல் பாவாணருக்கு ஏற்பட்ட நட்பு பாவாணரின் பிற்காலப் படைப்புக்கள் பல வெளியாக பெருந்துணையாயிற்று என்பர் புலவர் இரா. இளங்குமரன்.

மன்னார்குடி வாழ்க்கை

மன்னார்குடியில்* பாவாணர் வாழ்ந்த காலத்தில் பிறமொழியாளர்க்குத் தமிழ் கற்பிக்கும் பணியும் மேற்கொண்டிருந்தார் பாவாணர்.

மன்னார்குடிப் பின்லேக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தலைமைத் தமிழாசிரியராகப் பணியாற்றியபோது பாவாணர் எழுதிய நூல்களில் ஒன்று தான் 'கிறித்தவக் கீர்த்தனம்' ஆகும்.

தமிழ் நூல் விவர அட்டவணை

கிறித்தவக் கீர்த்தனம் முதற்பாகம் பாரதி அச்சுக்கூடம், மன்னார்குடி 1932 என்ற குறிப்பு தமிழ் நூல் விவர அட்டவணையில் காணப்படுகிறது.

பாவாணரின் இசையறிவு

இந்த நூலினை மேற்போக்காகப் பார்த்தால்கூடப்

---

* பாவாணரின் முழுமையான வரலாற்றுக் குறிப்புக்களை செ. திவான் பதிப்பித்துள்ள பாவாணரின் 'துவாரகை மன்னன்' நூலில் காணலாம்.

பாவாணரின் இசையறிவும், அது பரந்து பரவிக் கொண்டிருந்த எல்லைகளின் விரிவும் நம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன.

இந்த நூலில் உள்ள பாட்டுக்கள் அனைத்திற்குமே இராகம், தாளம், மெட்டு ஆகிய பல குறிப்புக்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பாட்டுக்கள் பலவற்றிற்குக் கருநாடக இசை வழியான பண்கள் இவை எனக் குறிப்பிடப்பட்டுள்ளன. தியாகராசருடைய கீர்த்தனை மெட்டுகளில் பாட்டுகள் பல அமைந்துள்ளன.

தேவார, திருவாசக இசை நடைகளைப் பின்பற்றிய பாடல்களும் உள்ளன. இராக, தாளக் குறிப்புக்களை மட்டும் பெற்றிருக்கிற பாடல்களும் உண்டு.

நாட்டுப்புற மக்கள் விரும்பிப் பாடுகின்ற தெம்மாங்கு 'சிந்து' ஆகிய மெட்டுக்களிலும் பாடல்கள் உள்ளன. இயேசு பெருமானின் பிறப்பு முதல் அவர் திரும்ப வருதல் ஈறாகச் செந்தமிழ்ச் சுவை சொட்டச் சொட்ட பக்திச் சுவை பெருகப் பெருகப் பாடப்பட்டுள்ள பாட்டுகள் இந்த நூலில் உள்ளன.

சிலப்பதிகாரம் – இளங்கோவடிகள்

சிலப்பதிகாரத்தில், ஆய்ச்சியர் குரவையில், ஆயர்குலப் பெண்கள் திருமாலைப் புகழ்ந்து பாடுவதை இளங்கோவடிகள், இவ்வாறு குறிப்பிடுகிறார்:

> சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே
>
> திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே
>
> கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
> கண்ணிமைத்துக் காண்பார்தம் கண்ணென்ன கண்ணே
>
> நடந்தானை ஏத்தாத நாஎன்ன நாவே
> நாராயண வென்னா நா என்ன நாவே

குமரற்பரவல்

பாவாணர் 'குமரற் பரவல்' எனும் தலைப்பில் இளங்கோவடிகளைப் பின்பற்றி இந்த நூலில் இயேசுபிரானைப் பாடுகிறார்.

> தேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே
> திறமிருந்துங் கேளாதார் செவியென்ன செவியே

காந்தாளைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண் விழித்துக் காண்பார் தங்கண்ணென்ன கண்ணே

கடந்தானைப் பன்னிருவர் கண்டஞ்ச நீர்மேல்
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே

இளங்கோவடிகள் செவியையும், கண்ணையும், நாவையுமே பாடப் பாவாணர் கையையும், நெஞ்சையும் சேர்த்துப் பாடுகிறார்.

பேராசிரியர் பொன்னு ஆ. சத்திய சாட்சியார்

1981-இல் பாவாணரின் கிறித்தவக் கீர்த்தனம் மறு பதிப்பு செய்யப்பட்டபோது சென்னை தாம்பரம் கிறித்தவப் பேராசிரியர், பாவலர் பொன்னு. ஆ. சத்திய சாட்சியார் எம்.ஏ., பி.ஓ.எல். எழுதிய முகவுரையில் இதனைக் குறிப்பிட்டு, பாவாணர் பெருமையைப் போற்றிப் புகழ்ந்துள்ளார்.

வீ. ஞானசிகாமணி

கிறித்து இயேசுவின் ஊழியன் வீ. ஞானசிகாமணி, 1969-இல் எண்ணூரில் பாவாணரின் மகளார் திருவாட்டி மங்கையர்க்கரசி இராபின்சன் அவர்களைச் சந்தித்தபோது, தனது தந்தையாரின் 'கிறித்தவக் கீர்த்தனம் என்னும் நூலினை அப்போது வழங்கினார். நூலின் இரண்டு அட்டைகளும் இல்லை; நூற் பொருளுக்கு முற்பட்ட பக்கங்களும் அப்போது இல்லை. பாவாணர் எழுதிய அந்த நூலின் பதிப்பு கிடைத்தால் வரலாற்றிற்கு மேலும் பல செய்திகள் கிடைக்கக்கூடும். 1981-இல் அந்த நூலினைத் திரும்பவும் பதிப்பித்த வீ. ஞானசிகாமணியார் வேதாகம மாணவர் பதிப்பகத்தாரின் வாயிலாக வெளிவரும் முதல் பதிப்பு நூலாக அதனை வெளியிட்டார்.

புலவர் அ. நக்கீரன் – கோ. இளவழகன்

'தமிழ் மண் பதிப்பகம் சார்பில் செந்தமிழ்க் காஞ்சி' எனும் தலைப்பில் பதிப்பாசிரியர் அ. நக்கீரன், பதிப்பாளர் கோ இளவழகன் ஆகியோர் 'பாவாணரின் பாடல் திரட்டு', 'இசையரங்கு இன்னிசைக் கோவை', 'சிறுவர் பாடல் திரட்டு', 'கிறித்தவக் கீர்த்தனைகள்' ஆகிய நான்கு பாடல் தொகுப்பையும் கி.பி. 2000-இல் வெளியிட்டனர்.

ஈசா (அலை)

இஸ்லாம் மார்க்கத்தின் ஏக இறைக் கொள்கையை திருகுர்ஆன் - அண்ணல் நபி (ஸல்) வழிமுறைகளோடு பின்பற்றி வாழும் அடியேன், புனித திருமறையாம் திருகுர்ஆனில் போற்றிப் புகழப்படும் ஈசா (அலை) (இயேசுபிரான்) குறித்து பாவாணர் பாடிய கீர்த்தனங்களைப் பதிப்பிக்கும் வாய்ப்பைத் தந்திட்ட ஏக இறைவனுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.*

கிறித்து பெருமானிடத்தில் பாவாணருக்கு இருந்த பற்றும் திருப்பணி ஆற்றுவதற்கு இருந்த இளமைக்கால விருப்பமும் கிறித்தவர்களின் பைபிளை நல்ல தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்வதற்கு பாவாணர் மேற்கொண்ட முயற்சியும், அந்த முயற்சியில் பாவாணருக்கு ஊக்கமும், அதற்கு ஆதரவும் தராத நிலை ஏற்பட்டதும், மறைந்து கிடக்கும் வரலாற்றின் பகுதிகளாகும். அவைகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்கும் பாவாணரின் நூலொன்றினை மறுபதிப்பு செய்வதற்கும் காலம் வழங்கிய வாய்ப்புக்கு எப்படி நன்றி சொல்வேன்?

நூலினை நல்ல முறையில் அச்சிட்ட சிவசக்தி ஆர்ட்ஸ் கு. குமரேசன் அவர்களுக்கும், கணினியில் அழகுற வடிவமைத்துத் தந்த பாளையங்கோட்டை நான்சி கணினியகத்திற்கும், முகப்பு அட்டையை வடிவமைத்துத் தந்த பாளையங்கோட்டை N. சங்கர், K. முருகன் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நூல் வெளிவர உதவிய கண்ணியத்திற்குரிய நீதியரசர் டேவிட் கிறிஸ்டியன், சம்சிகாபுரம், மாமா மு.செ. முத்துச்சாமி ஆகியோருக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

01.01.2010

பாளையங்கோட்டை

செ. திவான்,

106F/4A திருவனந்தபுரம் சாலை,

பாளையங்கோட்டை – 627 002

திருநெல்வேலி மாவட்டம்.

✆ 0462 - 2572665

---

* கீர்த்தனங்களில் சிலவற்றில் இஸ்லாம் மாறுபட்ட கருத்து கொண்டது என்பதனையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொருளடக்கம்

காப்பு
கடவுட் பரவல்
அவையடக்கம்
உலகநேசர்க் குரைப்பது
திக்கற்ற பாவிக்குத் தெரிவிப்பது
புறமதத்தார்க்குப் புகல்வது
குமரற் பரவல்
அன்புறு பதிகம்
குமரவணக்கம்
கிறித்துவின் பிறப்பு
கபிரியேல் மரியாளை வாழ்த்தல்
கிறித்துவின் பிறப்பு
ஏசுவின் ஏழைக்கோலம்
எட்டாம் நாள் விருத்தசேதனம்
தேவதூதன் யோசேப்புக்குச் சொல்வது
இயேசுவின் இளமை
திருமுழுக்கு
ஏசு சாத்தானால் சோதிக்கப்பட்டது
கானாவூர்க் கலியாணம்
மலைப் பிரசங்கம்
பரமண்டல செபம்
கவலைப்படாமை
நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைக் குணமாக்கினது
விதைக்கிறவன் உவமை
காற்றையுங் கடலையு மதட்டினது
ஐந்தப்பங்கொண்டு ஐயாயிரவருக்கு உணவளித்தது
பிறவிக்குருடனுக்குப் பார்வையளித்தது
மறுரூபமானது
பவனி
தலைவி தோழிக்குச் சொல்லியது

அத்திமரத்தைச் சபித்தது கிறித்துவின் பாடுகள்
சிலுவைச் சிந்து
யூதாசு காட்டிக்கொடுத்தது, காய்பாவின் விசாரணை,
பேதுரு மறுதலித்தது
பேதுரு மனங்கசந் தழுதது
பொந்தியுப்பிலாத்துவின் விசாரணை ஏசுவின் மரணாக்கினை
ஏசுவானவர் சிலுவையைச் சுமந்தேகினது
ஏசுவைச் சிலுவையி லறைந்தது
வலதுபாரிசத்துக் கள்வன் வேண்டுதல்
சிலுவையின் ஏழு வசனங்கள்
மாதர் புலம்பல்
சிலுவைத் தியானம்
கவிசேடகன் கிறித்தியானுக்குச்
சிலுவையைக் காட்டிச் சொல்வது
உயிர்த்தெழுதல்
பரமேறுதல்
கிறித்து பிதாவின் வலப்பாரிசத்திலிருந்து
பாவிகளுக்காகப் பரிந்து பேசுதல்
மெய்த்தெய்வம்
நெஞ்சோடு கூறல்
திருச்சபைக்கு எச்சரிப்பு
கிறித்துவை வேண்டுதல்
கிறித்துவின் இரண்டாம் வருகை
நடுத்தீர்ப்பு
இடப்பக்கத்தார்க்குச் சொல்வது
ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்

காப்பு

கலிவிருத்தம்

பூவினிற் போகமே புந்தி பொருந்திடும்
ஆவண மார்ந்தருக் கன்று வரைந்தன
பாவினை யின்றியும் பண்டித ருள்ளரால்
தேவனைப் பாடவுந் திருவருள் வேண்டுமே.

கடவுட் பரவல்

பிதா

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மன்னுயிர்[1] ரென்றுங் கெட்டு மாண்டுபோ காம லென்றும்
மன்னுயிர்[2] ரடைய வேக மகனைமுன் னளித்துப் பாரில்
இன்னதா யன்பு கூர்ந்தா ரெனிற்றிருப் பரம தந்தை
என்னதென் றுரைப்பேன் ஈசன் எனக்கருள் செய்த வாறே.

குமாரன்

பாவியை மீட்க வின்பப் பரத்தைவிட் டிறங்கிப் பாவம்
பூவிலோ ரேழை யாகிப் பொறையொடு திரிந்து சுற்றி
நாவினா லுரைக்க வொண்ணா நடுக்குறும் பாடு பட்டே
ஆவியு மளித்த ஏசு வடியினை முடிமேற் கொள்வாம்.

பரிசுத்தாவி

எண்ணரு மாதி நீர்மே லியங்கியே ஏசு தேவ
புண்ணியன் தலைமே லன்று புறவ[3] மா யிறங்கிச் சீடர்
கண்ணிய பெந்தேக் கோத்திற் கனற்பெருங் காற்று வீசி
மண்ணியல் மொழிகள் பேச மருவுதூ யாவி போற்றி.

முத்தேவர்

நித்திய சீவ னைமுன் நிமலனாந் தந்தை தந்தார்
குற்றவூன் மாந்தி மாந்தன் குற்றுயி ரானான் ஏசு
நற்றவன் தசையி ரத்தம் நன்மருந் துணவாய் நல்கச்
சுத்தமா வாவி யாரும் சுகம்பெற வீசி னாரே.

---

1. மனிதாத்துமா, 2. நித்தியசீவன், 3. புறா.

திரியேக தேவன்

எங்கணும் நிறைந்த செல்வத் திறைவனி லொருகூ றன்றோ
கொங்கலர் நறுந்தண் டாராய் குமரனென் றுரைக்குந் தெய்வம்
அங்கவ ரிருவர் கொண்ட ஆவியே பரிசுத் தாவி
துங்குமோ ஆவி யின்றித் தம்பிரான் வினையு முண்டோ?

அவையடக்கம்

பாட்டுடைத் தலைவ னந்தப் பரமனே யவனோர் காலும்
கேட்டினை யடையா னாகக் கிளப்பதென் பொருத்த மின்மை
நாட்டியல் வழுக்க ளைந்தும் நம்பனோர் பொருளாக் கொள்ளான்
காட்டுறப் பிழைக டோன்றாக் கல்விநூ லுலகத் துண்டோ?

உலகநேசர்க் குரைப்பது

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கவலைமிகு முலகியலோர் கனவாகி யடிம்படிவிழும்
கண்ணுவதேன் செல்வ போகம்
அவநிகழு மாசை[1] வழிச் சென்றுதிரு வடைந்தாரும்
ஆசை[2] யென எல்லை காணார்
பவநெறிசே ரெரிவிலகிப் பண்ணவனாங் கிறித்தேசு
பாதார விந்தஞ் சேர்தி
அவனிமுழு துடையானும் ஆன்மாவை யிழந்துறூஉம்
ஆதாயம் யாது மாதோ.

திக்கற்ற பாவிக்குத் தெரிவிப்பது

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பாங்கரும் பொருளும் மற்றும் படிவமு மில்லை யென்றே
ஏங்கியிங் கிருக்கும் பாவி யெழுமனக் கிளர்ச்சி யோடே
நீங்குமோர் பாவி மீளின் நின்மலன் தூத ரெல்லாம்
தாங்கரும் பேரா னந்தத் தாண்டவ மாடி நின்றார்.

---

1. விருப்பம், 2. திசை.

புறமதத்தார்க்குப் புகல்வது

வானத்தின் கீழே யெங்கும் வணங்குதற் குரிய தெய்வத்
தானத்தில் ஏசு வல்லால் தழுவுறப் பிறிதொன் றுண்டோ?
மேனித்த வீடு சேர விதுபல நெறிக ளில்லை
நானத்த முயிர்மெய்[1] யென்றார் நம்பனா ருலகத் தீரே.

குமரற் பரவல்

கொச்சக ஒருபோகு

1. பாவிகளை மீட்டருளப் பாரேழை யாகிச்
சேவடியுஞ் சிவந்துளையச் சேணடைந்து நாளும்
ஓவறஊ றியற்செய்த உள்ளதனாம் ஏசு
தேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திறமிருந்துங் கேளாதார் செவியென்ன செவியே.

2. சிறந்தாலுஞ் சாய்க்கவிடஞ் சிறிதுமின்றி யெங்கும்
கரந்தாள்மெய் கண்ணுயிர்வாய் கருதியவர்க்கீந்து
பரந்தேதன் பகைவர்வரப் பருவம்வரு முன்னே
கரந்தானைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்விழித்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

3. மடந்தீரப் பலவுரைத்து மாநிலத்திற் சுற்றிப்
படர்ந்தாடும் படவரவு பாதாளஞ் சாவு
கடந்தானைப் பன்னிருவர் கண்டஞ்ச நீர்மேல்
நடந்தானைப் யேத்தாத நாவென்ன நாவே
நசரேய நமவென்னா நாவென்ன நாவே.

4. விண்ணொளியும் விரிநீரும் விரைந்தபெருங் காற்றும்
மண்ணுயிரு மிருவா மலருமிரு சுடரும்
தன்னளியுந் தானாகித் தனிநின்ற நிலையைக்
கன்னியதுங் குவியாத கையென்ன கையே
கைவீசிச் செல்வார்தங் கையென்ன கையே.

5. பண்ணியமைந் தால்வனத்திற் பகருமையா யிரவர்
உண்ணியநல் விருந்தளித்த உம்பர்பெருங் கோனை

---

1. வழி, சீவன், சத்தியம்.

நண்ணியெனை மீட்டருளும் நாதனைநள் ளிரவும்
எண்ணியெண்ணி யுருகாத நெஞ்சென்ன நெஞ்சே
இடம்பரந்து வல்லென்ற நெஞ்சென்ன நெஞ்சே.

அன்புறு பதிகம்

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பண்- திருநேரிசை 1. கொரி. 13

வெண்கலத் தாளம் போல விண்ணில மொழிகள் பேசி
முன்புகல் தரிசி யாகி முழுமறை யறிவுற் றாலும்
மன்பெரு மலையைப் பேர்க்கும் மால்விசு வாசி யேனும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

நன்பொருள் யாவு மீந்து நல்கினு முடம்பு தீக்குத்
தன்புகழ் கூறா தென்றும் தயவொடு சாந்த மேவி
புன்செருக் கழுக்காக றின்றிப் புரிவினைத் தூய்மை கொள்ளும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

தன்பதம் சினமே தீங்கு தழுவிடா தநியா யத்தில்
இன்புற வின்றி மெய்யில் எழிலுற மகிழ்ந்தி யாவும்
நம்பியே பொறுக்கும் தாங்கும் ந[illegible]ன் விசுவா சிக்கும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

மன்பல பாடை தீர்க்க தரிசன மறிவு மாயும்
புன்றலைக் குழவிக் கேற்ற புருடனா யொழித்து விட்டேன்
நம்புதல் விசுவா சத்தில் நனிபெரி தாக மன்னும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

யாக்.2

அன்பறு விசுவா சம்மே யமையுமென் றிருத்தல் வேண்டா
பண்பறு பேயும் நன்றே பரமனை விசுவா சிக்கும்
பின்புநல் வினையில் லாமற் பிழைக்குமோ விசுவா சந்தான்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

குறள்

நன்பெருஞ் சிறப்புக் கொண்ட நவையறு மார்வ மாந்தர்
புன்கணீர் பூசல் செய்யப் புதவுடை வெள்ள மாகி

என்புயிர் பொருள்க ளெல்லாம் ஏனையோர்க் குரிமை செய்யும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

பொது

பண்பெறு மழலை மக்கள் பயிலரு மகத்த ரேனும்
அன்புடை யிருபெற் றோரும் அருகணைத் துவகை பூப்பர்
மன்பெருங் குறைக ளெல்லாம் மறைத்துறு பாவம் போக்கும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

நன்பறத் தூய ரேனும் நளிகடற் காதற் றேவன்
என்பதத் தேழை யாகி இழிகுலத் தவரோ டுண்டு
புன்படப் பாடு பட்டுப் பொன்றினர் தூரிய தேனும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

துன்புறு தவத்தின் யோகத் துறவறந் துவரப் பூண்டு
வன்புறு யாக்கை பெற்று வாசியில் வாழ்ந்து நீடி
என்பெருஞ் சித்தி பெற்றே எழிலுறு நிலைநின் றாலும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

பண்புற மறைப யின்று பலபெரும் பட்டம் பெற்றும்
இன்புறப் பிரசங் கித்தும் இலகுரை விளக்கங் கூறி
நம்புறப் புதுமை செய்து நரருறும் பேய்வி டுத்தும்
அன்பெனக் கில்லா விட்டால் ஆவதொன் றில்லை காணே.

1. குமரவணக்கம்

கானடா- முன்னை (ஆதி)

(இம் மெட்டொன்றும் என் உடனாசிரியர் ஏலிசீநிவாசையர் அவர்கள் தெரிவித்தது)

தேவகுமாரா! உன் திருவடி சரணம்
தீனதயாளம் உன் திவ்வியா பரணம்
திரென தாவரணம்[1]

பூமனு வாகிய புண்ணியா! சரணம்
பூரண நீதியிற் பொலிந்தனை கிரணம்
போற்றினேன் உன் சரணம்[2]

ஆவரணம் - ஆணவம், 2. சரணம் - நமஸ்காரம், பாதம், அடைக்கலம்.

தேச மெங்கும் நலம் செய்தவா! சரணம்
தீயரை மீட்கவே தெரிந்தனை மரணம்
தேகமுற்றாய் விரணம்[1]

பாவியை மீட்டருள் பரமனே! சரணம்
பத்தருக் குள்பதும் பயமறும் அரணம்[2]
பதிந்தருள் என் கரணம்[3]

வானவர் போற்றிடும் வலவனே! சரணம்
வருந்திபெற் காகவே பரிந்தனை சரணம்
வந்தருளாய் தருணம்.

2. 'நாத விந்து கலாதீ' என்ற மெட்டு

ஆர ணம்புகழ் ஆதீ நமோ நம
ஆத மின்புறு நீதீ நமோ நம
ஞான சுந்தர சோதி நமோ நம (நராகி)

நார ணம்புரி தூயாவி மீதுற
நான கன்[4] கர ஞானாபி டேகமு
ணாளு கந்துபி தாவோடு மேவிய (நசரேயா)

வார ணங்கலி லேயாவு மாருத
வேக முந்தணி வீறான வாசக
மாவ குந்துமெ யாவீ நிவாரண (மறியாகி)

மார ணம்படு பாதாள மாகணம்
மாய வென்றெழு மாராய்! பேய்முதல்
மாள என்றனை ஆளாய் மனோகர (மணவாளா)

3. கிறித்துவின் பிறப்பு

தீர்க்கதரிசனம்: மீகா. 5: 2; ஏசாயா. 7: 14

'ஜோர் ஜோர் ஜோர்' என்ற மெட்டு

1. யூதேயா தேச முற்ற யோக முள்ள பெத்தலேம்
யூதாவின் மாகுலத்தில் ஏது நின்போல் இத்தலம்

---

1. விரணம் - காயம், 2. அரணம் - கோட்டை, 3. கரணம் அந்தக்கரணம், 4. நானகன் - யோவான் திருமுழுக்குநர்.

2. இசரவேலை யாளும் பிரபும் எழுந்தருளும் உள்ளிகை
இதோவொரு மகவுயிர்க்கு மென்னும் எளிய கோலக் கன்னிகை.

3. இம்மானு வேல னென்றே இவருக் கிடுவர் இயற்பெயர்
நம்மோடு தேவ னென்னும் நலமிகும் பொருள் அதற்குயிர்.

4. கபிரியேல் மரியாளை வாழ்த்தல்

லூக்கா. 1: 28-33

'பழனி' மாமலை வாழும்' என்ற மெட்டு

இராகம் - காப்பி தாளம் - ஒற்றை

1. கிருபை பெற்ற மரியே கிளர்ந்துநீ வாழ
பரமன் நித்த முனக்குப் பலந்தரு தோழன்

2. அரிவை யருக்குள் நீயே அடைந்தனை ஆசி
அஞ்சாதே தேவதிரு அருட்சக வாசி

3. கருப்பவதி யாயொரு கலைஞனைப் பெறுவாய்
பெருக்கமுடன் ஏசென்னும் பேரது தருவாய்.

4. மாபரமனுக்கவர் மகனெனப் படுவார்
தாவீதின் அரியணை தனையவ ரடைவார்.

5. இசரவேல் குடும்பத்தை என்றென்றும் ஆளும்
இறுதியவ் வரசிற்கே இலையொரு நாளும்.

5. கிறித்துவின் பிறப்பு

இராகம் - பியாக்

தாளம் - முன்னை

பல்லவி

இத்தரையின் மத்தியினில் பெத்தலையில் சத்திரம்

துணைப் பல்லவி

அத்தனேக புத்திரன் கிறித்துவு முதித்தனர் (இத்)

உருவடி (சரணம்)

கர்த்தரின் தூதன் நற்செய்திப் போதம்
செய்த்தலைசென்று சொல்ல மைத்தவர் கண்டுகொள்ள (இத்)

உன்னதும் மானம் மண்சமா தானம்
மன்பதை மேற்பிரியம் மன்னற்காக விண்பாட (இத்)
மீனு[1] றக் கீழார் வானநன் னூலார்
மின்னொளிர் பொன்னே தூபம் வெள்ளைப் போள மிறுக்க (இத்)

6. ஏசுவின் ஏழைக்கோலம்

'வெடலனு கோதண்டபாணி' என்ற மெட்டு

தோடி ரூபகம்

பல்லவி

ஏசையா இதென்ன கோலம்
ஏழையோநீ இந்திர சாலம்

துணைப் பல்லவி

மேசையா மீன்மிளிர ஞாலம்
மேலை வானுனை மீச்சொல் காலும் (ஏசையா)

உருவடி

காசினிதீ குளிரும் காலம்
கன்னியேழை மரியாள் மூலம்
காலி சேரயர் காவடித் தோழும்
கண்டதில்லை இடம்பி சாலம் (ஏசையா)

தூசுபழங் கந்தை மேலும்
துய்ய பஞ்சணை புல்லே கீழும்
தொழுவர்[2] முனமுன் தூதராலும்
தோற்ற மறிந்தார் தூங்கர் போலும் (ஏசையா)

---

1. மீன் – நட்சத்திரம், 2. தொழுவர் – இடையர்.

7. எட்டாம் நாள் விருத்தசேதனம்

சிமியோன் துதி

'அநாதுடனுகானு' என்ற மெட்டு

பல்லவி

என்னே! எனது பாக்யம்– இம்மையே

துணைப் பல்லவி

முன்னோன் மகன்வரு முன்னிறப்ப தில்லென
முன்னே யுரைகாணவின் றேகவை (என்னே)

உருவடி

கோனே! உம்மடியேனை நற்சமாதானமாய் விடுகின்றீர்
ஏனோருக் கொளியாய் இனத்தில் மகிமையாய்
எல்லாருக்குமுன் ஆன ரட்சணியமுற (என்னே)

8. தேவதூதன் யோசேப்புக்குச் சொல்வது

'ரகுநாயகா' என்ற மெட்டு

பல்லவி

எடுசேயனை யோசேப் உடனே ஏரோது கொல்ல வகை தேடுவான்

துணைப் பல்லவி

கோடுபோ எகிப்து தாயொடே பின்நான்
கூறுமட்டும் ஆங்கே குடிகூடவே (எடு)

உருவடி

(ஏரோது இறந்தபின் தேவதூதன் சொல்வது)

நெடுநா ளாகின சேயைக் கொல்லவே நினைத்தார் இறந்தார்
எழுந்தேக இனி
விடுக யூதேயா ஏரோதின் மகன் வேந்த னானதினால்
நாசரேத்தில் வாழ (எடு)

9. இயேசுவின் இளமை

'தினமணி வம்ச' என்ற மெட்டு

பல்லவி

இளமையில் ஏசு இலகவே பெற்றோர் ஏவலில் நின்றார்

துணைப் பல்லவி

எளியரெ னாதும் இறைமையு மெனாது
குலவினை செய்தொரு குற்றமு ளாது (இளமை)

உருவடி

பெற்றவர் தகைமையைப் பிறர்வியந் தேத்த
பெருந்தகை பேணிப் பெரியவர் பணிந்து
நித்தனருள் ஞானம் நிலத்தவர் தயவினும்
நிறைமதி நீர்மை நீட வளர்ந்தனர் (இளமை)

10. திருமுழுக்கு

'சங்கற்பமே' என்ற மெட்டு

பல்லவி

யோர்தான் நதி யோவன்னான் சம்மதி
யூதகுல பதி யபிடேக வாதி

துணைப் பல்லவி

பாரில் தேவவதி[1] பண்படு உந்திதி
பரம்புக மனந்திரும்புவார் கதி (யோர்தான்)

வானிறப் புறாவின் வடிவாய்த் தூயாவி
வந்திறங்கித் தேவ மைந்தன்மேற் குலாவி
வானகப் பிதாவும் வாசனமொன் றேவி
வணங்குந் திரியேக திறம் மேவியே (யோர்தான்)

---

1. வதி – வழி

11. ஏக சாத்தானால் சோதிக்கப்பட்டது

'ப்ரேம சபையே' என்ற மெட்டு

பல்லவி

வனமேகவாசம் வனப்பிர தேசம்

துணைப் பல்லவி

அனைவருந் தேவேசம் ஆவியுட தேசம்
உணரும் பிரகாசம் ஊழியப் பிரவேசம் (வனமே)

உருவடி

உண்டியில் நாற்பானாள் உபவாச மேனாள்
உலகத்தே வானான் உன்னதன்பாற் போனான்
தின்பொருளி லிச்சை தேவனைப் பரிட்சை
திடமேய ருச்சை தேறி பேசு ரட்சை (வனமே)

12. கானாவூர்க் கலியாணம்

'தாதாபாய் நவரோஜி' என்ற மெட்டு

பல்லவி

கானாவூர்க் கலியாணம்
கம்பீ ராதன சம்பா ஷோதனக் (கானாவூர்)

உருவடி

கானாது கந்த ரசம்
ஆனாவிருந்து நிசம்
ஆண்டவா அசம் ஈது குறையென
வேண்டி னார்மிக ஏகபரமனை (கானாவூர்)

உரைப்பாட்டு

ஆறு சாடிகளின் நீரை அருமை ரசமாகச் செய்த
அற்புதமா மகிமைத் தேவன்
நீறு மூடுந் தழல்போல நிமலனாம் அவதாரன்
நித்திய மாவழி மெய்ச்சீவன்

உரைத் தொடர்

ஏதேனில் ஆதி மணம்
ஏவாளோ டாதம் மூனம்
ஈசனே குரு தந்தையும் மாமனும்
ஏசுவே திரு இந்தமகா மணம் (ஊனாலூர்)

13. மலைப் பிரசங்கம்

செபிக்கும் முறை

'வாழலோ சகிப்ரோ' என்ற மெட்டு

கீரவாணி - ரூபகம்

பல்லவி

செயம்பெறச் செயவே செபமே
செகமே யலகை தீர

துணைப் பல்லவி

புயபல தூனியல் மனமே
புவன மன்னும் போகும் பின்னே (செயம்)

உருவடி

அருவைாச கார்த்தமே அறையா திருமின் அவையிலென்றும்
அகவுறை யாண்டவ ரறிவார் அறிய துதிகளே யனைட்டும்
இதர சிந்தனை விண்டறவே ஏகி நீட அந்தரங்கம்
இறையைத் தரையிற் கும்பிட் டேத்தி
இராகியன்பு மல்கி நின்றே (செயம்)

14. பரமண்டல செபம்

'பொன்னார் மேனியனே' என்ற மெட்டு

1. விண்ணார் மண்டலத்தில் – மிக– வீற்றிருக்கும் எந்தையே
பண்ணார் உந்தன் நாமம்– பரி சுத்தப் படுவதாக
கண்ணார் உம்மரசு– கடி – தாம்வருக வானில் உம்
எண்ணே யாவதுபோல்– ஆக– இப்புவிமே லென்றுமே

2. அன்றே ஊணிடும் யாம்– எமக்– காளர்குற் றம்பொறுக்கும்
நன்றே போலெமக்கும்– அருள்– நாதனே குற்றம்பொறும்
தொன்றார் சோதனையும்– வருந்– துன்பமும் தீர்த்தருளும்
மன்றே உம்முடைமை– ராச்சியம்– வல்லமை மாட்சி ஆமென்.

15. கவலைப்படாமை

'கலிலோ' என்ற மெட்டு

பல்லவி

மனமே நீ கவலையுறுவதினால் மருவின தென பெருமை முழ ஒருமை

துணைப் பல்லவி

தினமே தன்வினை செய்வ தருமை
தெரிவதோ தினமறுமை– வெகு சிறுமை (மனமே)

உருவடி

எனவோ நாம் உண்பது முடுப்பது மென்பதே யுனக்கேனோ.
முனமாவி மெய்யுட னளித்தவன் முன்னவை மறுப்பானோ
வனமேவு பறவை தாவரமே வாழ்வன உயர்தரமே தேவகரமே (மனமே)

16. நூற்றுக்கதிபதியின் வேலைக்காரனைக் குணமாக்கினது

'சுஜனஜீவனா' என்ற மெட்டு

பல்லவி

பரமநாதனே திருப் பதும பாதனே ஏசு

துணைப் பல்லவி

தரும போதனே பெருந்தவ விநோதனே
அவதாரநீ யென்னில் சேரநான் ஒரு
தகவில்[1] லாதவன் ஏதும் (பரம)

உருவடி

கோரமென்றன் வேலையாள் திமிர்வாத வேதனை
கூறுமீண்டோர் வார்த்தை வினைஞன் குணமே பூரணம்

---

1. இல் - வீடு

18. காற்றையுங் கடலையு மதட்டினது

'மருகேஸரா' என்ற மெட்டு

ஜயந்த ஸ்ரீ　　　　　　　　　　　　　　　　　　முன்னை (ஆதி)

பல்லவி

சரணாகதி சார்ந்த தேம்பதி

துணைப் பல்லவி

சரணாவ தாரி சருவாதி காரி
புயன்மோ தினாரி பொரும் ஆதரி　　　　　　　　(சரணா)

உருவடி

கன்னிகை குமார கண்திறந்து பாரே
மன்னுலக மூட மலிதரங்க மையா
இன்னே மடிகின்றோம் என்னவே பன்னிருவர்
அந்நிலை கடிந்தாய் அலைமாருதம்　　　　　　　(சரணா)

19. ஐந்தப்பங்கொண்டு ஐயாயிரவருக்கு உணவளித்தது

'அமரநபிமாரெ' என்ற மெட்டு

பல்லவி

மனமுருகுந் தனி மாலை வனாந்தரம்

துணைப் பல்லவி

சனம்பெருகும் இனிச்சால முகாந்தரம்
தினகரனே செலத் தீவிர மாந்தரம்　　　　　　　(மன)

உருவடி

1. மாசனம் போகியே மருங்கு கிராமம்முன்
போசனம் நாடவே புகன்றனர் சீடரும்　　　　　　(மன)

2. போக வேண்டாமவர்க்குப் புதுவிருந்திடு மென்றே
ஈகையாண் டவர்கூற இருமீனைந் தப்ப மென்றார்　　(மன)

3. ஐம்பதைம்பது பேராய் அமர்த்தி யனைவரையும்
ஐந்தப்ப மிருமீனை ஐயன் ஆசீர் வதித்தார் (மன)

4. போதியவரை யுண்டு புடைக்க விலாவினூடே
மீதிய துணிக்கையும் மிகுந்த பன்னிரு கூடை (மன)

5. பெண்ணே பிள்ளை தவிரப் பெருவிருந் துண்டவர்கள்
எண்ணிலை யாயிரவர் இருந்ததாகக் கண்டனர் (மன)

20. பிறவிக்குருடனுக்குப் பார்வையளித்தது

'காணக் கிடையாத தங்கம்' என்ற மெட்டு

பல்லவி

ஆனந்தப் பேறாமென் அங்கம் – பர
மானந்தப் பேறாமென் அங்கம் – அதை
மானுங் கரணமில்லை யெங்கும் – மதிவிளங்கும் (ஆனந்த)

உருவடி

1. காணச் சுடர்மணியாம் காமர் முகத்தணியாம்
காட்சி நன்மாட்சி சுயாட்சி உரை சாட்சி (ஆனந்த)

2. ஏழையென் மீதிரங்கி யிருகண்ணுந் திறந்தவர்
ஈசன் மகேசன் பிரகாசன் கிறித்தேசன் (ஆனந்த)

3. சேற்றைப் பூசி விடுத்தார் சீலோவாம் நீரடுத்தே
சென்றேன்கை மொண்டேன் கண் கொண்டேன் உடனே கண்டேன் (ஆனந்த)

4. ஒருவர்க்கு மிவ்வற்புதம் உரையாவகை எவ்விதம்
ஓங்கும் நவாங்கம் தான்யாங்கும் உரைத்தாங்கும் (ஆனந்த)

21. மறுரூபமானது

'கொலுமலரெகத' என்ற மெட்டு

தோடி முன்னை (ஆதி)

பல்லவி

மகிமை யேசுபர மாதங்க மேனி

துணைப் பல்லவி

பகலென முகவொளி பனியுறை கட்டிநிகர்
வகையவர் தேகமும் வத்திரமும் ஒளியான (மகிமை)

உருவடி

1. மோசே எலியா ஏசு மூவரும் எருசலை
ஏசுமுடிவைப் பற்றிப் பேசினர் நேருமுந்திச்
சீடர்மா பேதுரு சிறந்த யோவான் யாக்கோபு
கூசவே பார்வை மாலைக் கொடிமுடி மேலே (மகிமை)

2. செஞ்சரன் நாத உந்தன் சித்தமேல் முக்கூடாரம்
விஞ்ச வறைவோ மென்றே வேண்டினன் பேதுருவும்
மஞ்சுமேல் நேச குமரனிவர் என்ற ஒலி
அஞ்சினர் சீடர் ஏசும் அபயமளித்தார் (மகிமை)

22. பவனி

'வங்கார மார்பிலனி" என்ற மெட்டு

சந்தக்குழிப்பு.

தானான தானதன தானதன தானதன
தானான தானதன தானதன தானதன
தானான தானதன தானதன தானதனந் தனதான

ஈராறு சீடர்களு மேகவுன தாணையென
நேராக வேகிபெத லேகமெனும் ஊரதனில்
நாராரு மாகமுதை யோடுமறி யேகொடுவந் தலைமேலே

சீரான சீரையணி வார்பணிய மாறரிய
வீராநல் வீறுபெற வேறிவல சாரியினை
ஏரான மானநரர் சீரைவிரி பாதைபுரிந் திதுமாக

வேறான பேர்பசிய சாகைவழி பாவவிரு
சாரார்கள் தாவிதுகு மாரபர நாமவரர்
ஓரோசை யானதுதி யாருளத மோசனாவென் றுரைகூர

மாராய மாவெருச லேநகர வீதிகளில்
ஆராரு மாரெனவி சாரணைசெய் வார்மருள
நேராளர் மாறுநச ரேயகுரு வேசுவெனும் பெருமானே!

நீராரு வாவதியும் நேராறுத ணாறுமுகம்
ஏராக வாவயம தேகியதி காரமொடு
சூரான சூரனென மாறியக வாணிகரும் புறமாக

வாரான வாரடியி னால்வெருவி யோடிடவும்
மாறாடு காசுமற வோர்பலகை யாசனமு
மாறாக ஒதுசெப வீடுகளர் மாகுகையென் குமரோனே!

பாராத பேர்முடவ ரோடுபிணி யாளர்பலர்
சீராக நீசெய்தவ மாபுதுமை தாவிதுகு
மாராய ஓசனவெ னோசையிடு பாலரொடுஞ் சினமாகி

நேராத பாரகர்பு ரோகிதரி தேனெனவும்
நீரோது வேதமென ஓர்வசன மோதிவிரி
பாரான வாழ்விலொரு மாவயவ ராளபரம் பொருளோனே!

23. தலைவி தோழிக்குச் சொல்லியது

'வெள்ளிப்பிடி யறுவாள்' என்ற மெட்டு

ஆரபி - ஒற்றை

மானிடருந் திரளாக மாணவக ரொடேகூடக்
கானமிளை யவர்பாடக் கல்விமானுங் காணாவாறே
பானுவொரு புயன்மேலே பாய்ந்துவரல் போலே சாலேம்
மாநகரி லோருபவனி மன்னன்வரக் கண்டேன் நானே.

வாகைபெற வயவீரர் வாளெனவே ஓலை வீசி
ஓகையுடன் இளையோரும் ஓசன்னா ஓசன்னா வென
சாகைதழை பலபேர்கள் சாலையிடச் சாலேம் நகர்
மாகழுதை மிசையேறி மன்னன்வரக் கண்டேன் நானே.

காவலரார் இவரென்று கண்டவரே கேட்டயர
தேவதூர வாரான தேசிகன் கிறித்தே சென்றார்
தாவிதுகு [illegible]த் தங்கமேனி பொங்கவொளி
மாவலமை பொடுவீதி மன்னன்வரக் கண்டேன் நானே.

ஓலைகரம் பிடித்துயர்த்தி ஓசன்னா ஓசன்னவென்று
பாலகரும் பலமாகப் பண்ணகரம் பாடிவரச்
சேலைகிளை பாவுவழிச் சென்றரே தேவாலயம்
மாலெனக்குள் வளர்ந்தேற மன்னன்வரக் கண்டேன் நானே.

சாகபுறா வாணிகரைக் கண்டுசினங் கொண்டேயவர்
ஆசனத்தைக் கவிழ்த்தோடி ஆச்சரியமா யடித்தார்
ஓசன்னா வோசன்னா வென்றேயாச் சிறுவர் பாட
மாசனத்தின் நடுவாக மன்னன்வரக் கண்டேன் நானே.

24.

'பாலாபிஷேகம் பழநி' என்ற மெட்டு

பல்லவி

தாவீது ராசகுமார வெம்பிரநீ தந்த பவனித் தரிசனமே
கோவேறு மாகழுதை வாகனாரூட கும்பிடவந்தேம் பரிசனமே

உரைப்பாட்டு

தேவாதி தேவன் பெருந்திரு நாமத்தால் வரும்
மூவாத ஏக பெரும் முருகோலைச் சாமரம்

முடுகியல்

உடைகளை விரித்தவ ரோசனாபாட
மிடைதர நெரித்திடும் மிகுசனங் கூடச்

பல்லவியெடுப்பு

சாலேமின் ராசாநற் சாந்தகுணச் செல்வன்
சாரி செய்து சாலேம் மாநகர்க்கே
கோலா கலத்துடன் கூட வருவதைக்
கூறுவேம் சீயோன் குமாரத்திக்கே

உரைப்பாட்டு

தேவா லயத்திற்குள் வியாபாரம் நீக்கி
நோவாருக்குச் சுத்தம் மேவா வாக்கி

முடுகியல்

பாலகர் ஓசனா பகரவும் வேத
பாரகர் மாசினம் மிகுதியு மோத

பல்லவியெடுப்பு

பாலகர் வாயிற் பரமானந் தத்துதிபாரு மென்றமெய்ப் பராபரனே (தூவீது)

25. அத்திமரத்தைச் சபித்தது

தென்பாங்கு

1. அத்தி மரத்துக் கிளி – மிக
அழகழகாய்ப் பேசுங் கிளி
தித்திக்கும் செங்கனியை – அது
தேடிப்பார்த்துங் காணவில்லை.

2. அத்தி மரத்திலே – மிக
அழகான பலஇலைகள்
எத்திவுஞ் சித்ததினால் – கிளி
இட்ட சாபம் பட்டதுபார்.

3. அத்தி மரம்படவே – கிளை
அயன்மரக் கிளியடைந்து
மெத்த மதூருள்ள – கனி
மிகவுண்டு களித்ததுவே.

4. அத்தி மரந்தளிர்க்கும் – அதை
அறிகுவீர் வசந்தகாலம்
இத்தரை யின்முடிவும்– உடன்
எட்டிவரும் பைங்கிளியே!

கிறித்துவின் பாடுகள்

கிறித்துவின் சீவியம் முழுவதிலும் அவருடைய பாடுகளே பாவிகட்குப் பிரதானமாகும். பாடில்லாமற் பலனில்லை என்றபடி கிறித்துவின் பாடுகளில்லாவிடிற் பாவிகட்கு மீட்பில்லை. ஒவ்வொரு கிறித்தவனும் தன் மீட்புக்குக் காரணமான கிறித்துவின் பாடுகளையே இரவும் பகலும் எண்ணித் தியானித்தல் வேண்டும். இதே நோக்கத்துடன் கிறித்துவின் பாடுகளெல்லாம் இங்குக் குறைவறப் பாடப்பட்டு இருக்கின்றன. கிறித்து மார்க்க சாரமான அன்பு (Love), ஊழியம் (Service), தியாகம் (Sacrifice) என்னும் மூன்றும் சிலுவைப்பாடுகளிலேயே ஒருங்கு திரண்டு கிடக்கின்றன. கிறித்துவின் தெய்வீகத்தையே நம்பாத காந்தியுங்கூடச்

சிலுவைத்தியானத்தினால் உலக முழுதும் நடுங்கத்தக்க வண்ணம் மேற்கூறிய மூன்று சக்திகளையும் பெற்றிருப்பாராயின், கிறித்துவையே மெய்த்தேவனென்று வணங்குங் கிறித்தவர்கள் அவரிலும் எத்துணையோ அதிகமாய் அச் சக்திகளையடையலாமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

உத்தம கிறித்தவன் ஒருவன் பிறப்பின் பண்டிகையிலும் உயிர்த்தெழுந்த திருநாளிலுங்கூடக் கிறித்துவின் பாடுகளையே தியானிப்பான். கிறித்து பிறந்ததும் உயிர்த்தெழுந்ததும் முன்னமே ஆயிற்று. அவருடைய பாடுகளினால் மீட்புண்டானதே யன்றிப் பிறப்புயிர்த் தெழுதல்களால் மீட்புண்டாகவில்லை. கிறித்து பிறவாமல் எங்ஙனம் பாடுபட முடியுமென்று சிலர் கேட்பர். அது சரியே. ஆனால் கிறித்து பிறந்தும் பாடுபட்டிராவிடின் அவர் பிறப்பினால் என்ன புண்ணியம்? ஆகவே மீட்புக்குக் காரணம் கிறித்துவின் பாடுகளே யென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கவில்லையா?

இனி, உயிர்த்தெழுதலோ தெய்வீகத்தா லுண்டானது; மகிமையும் இன்பமும் நிறைந்தது. அதனால் விசுவாசம் மட்டும் சிலர்க்கு உண்டாகும் அல்லது பலப்படும். மீட்போ சிலுவையிலேயே முடிந்துவிட்டது. 'முடிந்தது' என்ற திருவாக்கே இதை வற்புறுத்தும். பிறப்பின் பண்டிகையும், உயிர்த்தெழுந்த திருநாளும் மகிழ்ச்சியும் இன்பமும் விளைக்கத்தக்கவை யாதலின், மீட்பு முழுதும் திரண்டு கிடக்கும் கிறித்துவின் பாடுகளைப் பற்றியும் கிறித்துவை மரணவேதனைப்படுத்தின. தங்கள் பாவங்களைப் பற்றியும் கிறித்தவர்கள் (தங்களுக்காக அல்ல), கிறித்துவுக்காகவே வருந்துவதுபோல் நடிப்பவரும் மூன்றாம் நாள் உயித்தெழுந்த தினத்தில் (ஆத்துமார்த்தமாக அல்ல) சரீரார்த்தமாக அடையும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஆகையால் இடைவிடாத சிலுவைத் தியானத்தினாலேயே கிறித்தவர்கள் அன்பு, ஊழியம், தியாகம் என்ற மூன்று ஆற்றல்களையும் அடைதல் கூடும் என்பதையறிந்து கொள்க. ஒவ்வொரு கிறித்தவனும் கிறித்தவர்களையல்ல, கிறித்துவையே பின்பற்றவேண்டும். இதுவே மீட்பின் வழி.

கிறித்துவின் பாடுகளைப்பற்றி வேதநாயக சாத்திரியாரும், இரத்தினப் பரதேசியாரும், பண்டிதர் சத்தியவாசகம் பிள்ளை அவர்களும் இயற்றிய கீர்த்தனைகள் மிகவும் அருமையானவை. அவற்றையும் படிப்பின் ஆத்துமாவிற் கானந்த முண்டாகும்.

26. சிலுவைச் சிந்து

கிறித்துவின் பாடுகளும் மரணமும்

இராப்போசனம், கெத்செமனேத்தியானம்

'என்னடி நான் பெற்ற மங்கை' என்ற மெட்டு

பண்டிகையின் முதல் நாளை
மாலை வேளை
தம தாளை – ஏவிப்
பட்டினத்தில் ஒரு கேளை – அரி
பஸ்கா கொண்டாட வுன்
விஸ்தார வீடெனப்
பட்சமர் பேசவுங் கேட்டார் – உடன்
சித்தமே செய்தனர் வீட்டார்.
உங்களி லொருவன் இரவே
என்னைக் கரவே
காட்டித் தரவே – நேரும்
உண்மை யென்றார் ஏசு குருவே – பஸ்கா
உண்ணும் சீடர் துயர்
நண்ணி நானோவென்று
ஒவ்வொரு பேராகக் கேட்கும் – போது
உன்னதன் யூதாசைக் காட்டும்
ஏசுவே யப்பத்தை யெடுத்தார்
ஆசிப்படுத்தார்
பிட்டுக்கொடுத்தார் – இதோ
என்றன் உடலென்று கொடுத்தார் – பின்னர்
ஏனங் கொண்டென் ரத்தம்
பானம் பண்ணுமென்றே
ஏத்தித்தரச் சீடர் மடுத்தார் – உடன்
எல்லாரும் ஒலிவைத் தடுத்தார்
கெத்செமனே என்ற தானம்
இருங் கானம்
பெரு மானும் – தனி

சிறுமியிருந்து திகைவாய் – சீடர்
சிந்திந்து வெள்ளையாய்
குலுங்கிநின்றான் கல்லாய்
வெட்ட வெள்ளை அவர் மறுபடி – மிகத்
தட்டவும் மன்னவன் விடுப்படி
சாவு வெள்ள வீரமும்
படைப் பாரம்
ஏக வேறும் – அன்று
சாத்தானின் வெற்றி வாரம் – அந்தச்
சங்கடம் நீங்கவே
தந்தையை வேண்டிடவே
சாய்ந்து துயில்கொண்டனர் தூரம் – வந்து
தட்டி யெழுப்பினார் – நேரம்.

27. யூதாஸ் காட்டிக்கொடுத்தது, காய்பாவின் விசாரணை, பேதுரு மறுதலித்தது

'பாதி ராத்திரி வேளையில்' என்ற மெட்டு

காவனந்தனில் ஏசுவின் புறம்
காதகன் யூதாஸ் வந்தான் – அவர்
கன்னத்தில் முத்தம் தந்தான் – பணக்
காரியத்தைப் புரிந்தான் – யூதர்
கர்த்தன் ஏசுவைக் கைப்பற்றச் சீடர்
காற்றா வோடிப் பறந்தார்.

பேதுரு மிகவேக மாயுறை
பேர்த்து கூரிய ஈட்டி – உறைப்
பிடித்து கையைமுன் நீட்டிச் – சினம்
பெருகவே மறங்காட்டி – அங்கே
பேராசாரியன் வேலைக்காரனைப்
பெழித்தான் காதைத் தீட்டி
தம்பிரானது கண்டதும் மனம்
தாங்கா மல்முகங் கடுத்து – மிகத்
தட்டினார் கையைத் தடுத்து – சீமோன்

தரித்தான் வாளுறை மடுத்து— தேவ
தாசரும் முனாங் கூறிய தீர்க்க
தரிசனம் வந்ததடுத்து

கோமான் ஏசுவைக் காய்பாவின் மனை
கொண்டுபோய் யூதர் சேர்த்தார்— அங்குக்
கூடினார் சபை மூத்தார்— உடன்
கொல்லவே வழி பார்த்தார்— சிறு
குற்றமேனு மகப்படாமையால்
கூறிப்பொய்களைக் கோர்த்தார்.

ஆலயக்குறை கூறினார் பரன்
அமைதியாகக் காய்பாவும்— அவர்
அரசரீகம் வினாவும்— அவர்
ஆமென்ற உரை பாவம்— என
ஆடையைக் கிழித் தேசுவை மரத்
தறைய மூப்பரை யேவும்

காதகப் பெருபூதம் செய்தது
காரியத்தாறு மாறும்— ஏசு
கன்னத்தில் எச்சில் நாறும்— அவரைக்
கடிந்து குட்டிடுந் தோறும்— ஞானக்
கண்ணால் பார்வதை பண்ணி னாரென்று
கண்டு சொல்லெனக் கூறும்.

காய்பா வின்மனை யோர மாய்க்குளிர்
காய்ந்த பேதுரு இறையே— என்றுங்
கண்ட தில்லென்ற மறையே— மிகக்
காணவே மூன்று முறையே — கூவுங்
காலைச் சேவலைக் கண்டு சிந்தினன்
கண்ணீ ருங்குட நிறையே.

28. பேதுரு மனங்கசந் தழுதது

'தியானமே வரமைன' என்ற மெட்டு

தன்யாசி - முன்னை (ஆதி)

பல்லவி

பாவிநான் பரமையன் பங்கே பாகமும் பருகாத் துரோகி (பாவ

துணைப் பல்லவி

சேவல் கூவு முனமே மும்முறை தேவ
கோவை மறுத்தேன் கொடிதென் பாவக் குறைமேவ (பாவி

உருவடி

கரணமே வேகும் கசந்தழு மேகம்
கறைகொன்றது வெள்ளம் கரைந்தெவ னாகும்
மருவுவென் ஏசு மாதவன் பாதம்
மன்னிப்பு மாகும் மறவே னொருபோதும் (பாவி)

29. பொந்தியுப்பிலாத்துவின் விசாரணை ஏசுவின் மரணாக்கினை

'செந்தில்மா நகர்' என்ற மெட்டு

பஞ்சபாதக மிஞ்சிய யூதரும்
பானு வெழுந்துபின் கூடி– ஏசு
வானவனைக் கொல்ல நாடி– மிகு
பந்தனத்தொடு பொந்தியுப் பிலாத்
தின்கரத்திடை கொண்டுவிட்டனர்
பங்கமா மரணந்தனுக் காளான
பண்ணவன் தீர்ப்பினைக் கண்டு– யூதாசு
பாதக னுந்துயர் கொண்டு

முந்து நாளதில் வந்தவென் காசுகள்
மூப்ப ரிடங்கொண்டு சென்று– திரு
மூர்த்தியைக் காட்டினே னென்று – அவர்

முன்பு தன்பிழை கூறி முப்பது
வெள்ளிப் பணங்களை மீள வைத்திடு
முந்தியே யவர் எங்களுக் கேனென
முன்னவன் கோயி லெறிந்தான்— பின்பு
முடுகிப்போய் நான்று முடிந்தான்.

அந்த மாபண முங்கறை மாவிலை
ஆகாது காணிக்கை யென்றே—உடன்
ஆசாரி யர்நிலங் கொண்டார்— அங்கே
அன்னியப் பிணமடக்க வேரிடம்
இன்னு மப்புலம் இரத்த மாநிலம்
அன்றெரேமியா முந்துரை வாசகம்
ஆனது வேநிறை வேறி— உரை
வீணுறு மோதாசன் கூறி

புந்தி யாகவே பொந்தியு ஏசுவைப்
பூபதியோ வென்று கேட்டான்— அவர்
புகன்றபடி யென்னக் கேட்டான்—யூதர்
பொய்ப்பெருங் குறை கூறவே திரு
மெய்ப்பரன் பதில் மாறவேயிலை
புள்படாது வியந்த தேசாதிபன்
போற்றார் பொறாமையைக் கண்டான்— இரு
புரைஞரில் யார்க்குவீ டென்றான்

மன்று பீடம மர்ந்துள வேளையில்
மகிபன் பிலாத்துவின் தேவி— ஒரு
மனிதனையே விரைந்தேவி— அந்த
மாதவத்தனை நீவருத்தலி
ராவிலத்தனை பாடுபட்டனென்
மண்டலாதிப கண்டுசொளே யென
மகிணனிடஞ் சொல்லச் சொன்னாள்— ஒரு
மழலைமொழிக் கிள்ளை யன்னாள்

பண்டி கையுற வந்தவ ரேவலால்
பரபா சைவிட வென்று கேட்டார்— ஏசு
பரமனை யறையவே வேட்டார்— அந்தப்

பாமரக்குழு படியப் பொருந்திய
தானடக்கவு முடிதற் கின்றோப்
பங்கு நாளிலை இந்த மகான்பழி
பாருமென்றே மண்ணிக் காட்டும்– அந்தப்
பழிமெங்கள் வழியென்னுங் கூட்டம்

அந்த நோமேலெ ஏந்திய வாளைாயில்
அரிய வீரர்கள் சிறை வீடு– தேவ
மறியின் சிலுவையிற் பாடு உடன்
அரமனைப் படைவீரர் யாவரும்
இருதி றப்பட மேவி யேசுவின்
அங்கவாடை விலங்கவே சேபுடை

அணிந்து முள்முடி தலை மேலே– கரம்
அளித்தொரு மூங்கிற்செங் கோலே

முன்பு யூதமன் வந்தனம் வாழ்கென
முழங்காற் படியிட்டு– வாழ்த்தி –அவர்
முகந்தனில் உமிழ்நீரை வீழ்த்திக் –கர
மூங்கிலாலவர் சிரமறைந்துடன்
வாங்கு சேபுடையது பகிர்ந்துபின்
முந்தையாடை யணிந்துட னேகினார்
முதுகாடு தான்கொல் கதாவே– பின்பு
மொழிய வரவில்லை நாவே

30. ஏசுவானவர் சிலுவையைச் சுமந்தேகினது

இராகம் - செஞ்சுட்டி தாளம் - சாப்பு

கண்ணிகள்

சிலுவை சுமந்திதோ செல்கிறார் சாமியே
கொலுவை நினைந்தொரு கொல்கதாப் பூமியே

சுட்டியங்க காரனுங் காரணம் கூறவும்
திட்டியே சேவகர் தீவிரஞ் சேரவும்

பாரிலுள் ளோர்செய்த பாவங்கள் யாவுமே
பாரமாக எய்தப் பாரித்த வேதமே

ஆகார முண்ணாமல் ஆவி யொடுங்கவும்
தேகமோ புண்களால் தேங்கி நடுங்கவும்

நித்திரை யில்லாமல் நியாயம் விசாரித்துக்
கட்டியே கண்களும் காந்தி யெரிவுற்று

வையமெய் பேயுடன் வாகைமல் லாடியே
கையயர்ந்து பின்னே கால்கள்தள் ளாடியே

கேடுகெட் டபவக் கேளைத் தழுவுறப்
பாடுபட் டேவரும் பாரச் சிலுவையைத்

தாங்க முடியாமல் தஞ்சமே வீழவும்
ஆங்கொரு சீமோனை அன்றினர் ஆளவும்

கல்வாரி மாமலை கண்டு சமீபமே
கொல்வாரே கோதில்லாக் குன்றைஎன் பாவமே.

31. ஏசுவைச் சிலுவையி லறைந்தது

'திருவுற்றிலகு கங்கை' என்ற மெட்டு

அமரச் சேவகரேசு குமரக் கடவுளானை
அறையச் சிலுவை யோடு சென்றனர்– அந்தப்
பொறையச் சீமனதாகு மென்றனர்– களி
ஆடு கூளிகள் பல்கிமேவுக
பால மேநிறை கொல்கதாவிடம்

அடையக் கசந்த கள்ளைத் தந்தனர்– கொள்ளப்
பரமற் கிருந்ததில்லை சிந்தையே
குருசிற்பெரிய வாணி யுருவப் பரமனேசு
குருவைக் கையொடு காலறைந்தனர்– அவர்
உடையைப் பகிரவே விரைந்தனர்– அந்தக்
கோதி லாத குமரனை யன்றிவர்
யூத காவல னென வரைந்ததைக்
குருசிற் சிரந்தமிசை மாட்டினர்– ஏசு
குரிசிற் புரிந்திழை காட்டினர்
கிருபைக் குமரனோடும் இருக்க மிருசோரர்

செழுமச் சிலுவையறை வேவினர்– வீரர்
குழுமிப் பரிவு நீடு காவலர்– அங்கே
    கேசவம்பித பாதசாரிகள்
    கீழிறங்குமா கேசமோ வெனில்

கிருதிற் கோயிலெழுந்த பின்றைநாள் மூன்றில்
    திரும்பிப் பாயுமை ரட்சி யென்றனர்
அவரைப் போலவே பூத குரவப் பாரகமுதர்
இவனிப்போ திறங்குக நம்புவோம்– இவன்
அபயுக்கே பரந்த வரம்பினான்– முனம்
    ஆண்டவன்வரம் நம்பி னானவர்
    வேண்டிவின்று மிரங்க வேயென

அருகிற் சிலுவையிடச் சோரனும் – அந்த
அருமிக்க மணியாதி நவமுற்ற மணிவாறும்
அவனிக்கிருள் பரக்கத் தேவனை– ஏசு
அகதிப் படவரக்கக் கூவினர்– சிலர்

    வசையிற் பழிமொழியைக் கூறினன்
    அகவினா னெலியாவை யென்னவோர்
    மகனறாவுறு காடி தன்னையே

அவருக்கொரு கழையில் நீட்டினன்– அவர்
    அகவித் தமதுயிரை வீட்டினர்
வலமைத் தேவக நீடு திரையிற் கீழ்வரை கீள
மகிமிக்கே யதிர்ந்தது கம்பமாம்– பெரு
மலையிக்கே பிளந்தன துண்டமாம்– பல
    வால மாதவர் உயிர்த்தெழுந்தபின்
    சால மாநகரிடைத் தெரிந்தனர்

மகிமைக் காரியமாகக் கண்டவர்– இவர்
    அருமைத் தேவகுமாரன் என்றனர்
சரணப் பணிவிடைகள் புரியப் பரமனோடு
சதுரக் கலிலேயாவை நீங்கின– பல
மகரக் குழைய மாதர் ஏங்கினர் – கதிர்
    சாயும் வேளை யோசேப்பு நம்பனின்
    காய மோது பிலத்து வந்தாத்

தயிலத்தினை மிகுத்துப் பெய்தனன்– ஒரு
சயிலத்திலே படக்கஞ் செய்தனன்
திருடிப் பழகிநாளும் சிலுவைப்பட நியாயம்
சிரமப்படவே மிந்தத் தூயவர்– என்ன
கருமப் பதகஞ் செய்ய லாயினோ– என்று
தேவனே யுமதரசி லென்னையும்
காவுமே யெனவலது கள்ளனும்
திருவிற் பெரிய பரதீசிலே– இன்று
மருவப் பெறுவை யென்றார் ஈசனும்.

32. வலதுபாரிசத்துக் கள்வன் வேண்டுதல்

'ஸ்ரீரகுவர' என்ற மெட்டு

(வேண்டுதல்)

பல்லவி

ஆண்டவா உன தடியேனையும்
அரசாளும் வேளையில் ஆளாய்ச் சீராளா (ஆண்டவா)

(நெஞ்சொடு கூறல்)

துணைப் பல்லவி

நாமேதும் செய்தும் நன்றாகுந் தண்டனை
கோமா னிவரிற் கூறவோர் கோதுமேது (ஆண்டவா)

(பரதீசு பெற்றபின் பரவல்)

உருவடி

தேவகுமாரா திருஅவதாரா
பாவி யெனக்கும் பரதீ சுபகாரா (ஆண்டவா)

33. சிலுவையின் ஏழு வசனங்கள்

இராகம் - காப்பி தாளம் - திஸ்ர ஏகம்

முகவுரை

பாவிகட் காய்ப் பாரில் வந்தே பாடுபட்டுத் தேகநைந்து
தேவமகன் சிலுவையுறை திவ்யமணி ஏழுமன்பு
சேவையளித் தேகபெறச் சிந்தி நெஞ்சமே

1. எந்தையேநீர் இவர்களுக்கு மன்னித்திடும் தங்கள் செயல்
இன்னதென்றே அறியாதிருக் கின்றனரென் றேசிரந்தார்
முன்புரைத்த அன்புபொறை பண்புறவே

2. என்னையுந்தன் அரசிலென்றும் என்றலைக் கள்வனுக்கே
இன்றைக்கு நீ என்னுடனே பரதீசிருப் பாயென்றனர்
எம்பெருமான் வீடளிக்கும் எத்தரர்க்கும்

3. மாதேயதோ உன்றன்மகன் யோவானதோ உன்றா யென்றார்
மாதாகூடன் அன்புமிகும் மாணவனின் மைந்த நிலை
போதாத்தும் தேவிகழும் புண்ணியனார்

4. என்தேவனே என்தேவனே ஏனென்னைக் கைவிட்டீரென்றே
ஏனைமொழி ஏலிஏலி லாமாசபக் தானியென்றார்
மானிடனாய்ப் பாடுபட்டே யாண்டதிறம்

5. தேகமதால் நீரின்மேலும் தேவிகத்தாற் பாவிமேலும்
தாகமாக இருக்கிறேன் நானென்று சொன்னார் தம்பிரானும்
பானமின்றிப் பாய்ந்திரத்தம் போன நிலை

6. பாவம்பட நாகஞ்சாவு பாதளம் பேய்மீது வெற்றி
சேவகமோ வேதனையோ சீவபீட்போ முடிந்ததென்றார்
பாவபலி யானபெருந் தேவமறி

7. எந்தையேஉம் கைகளிலென் ஆவியை ஒப்புவிக்கின்றேன்
என்றுரக்கக் கூவியுடன் எம்பெருமான் மாய்ந்தனரே
தந்தையொடு தாமொருவ ரென்றதகை.

34. மாதர் புலம்பல்

'மேலே மௌலா' என்ற மெட்டு

பாதார விந்தமே பாவியின் சொந்தமே
நாதா பணிந்தமே நம்பி யிருந்தமே
நானிலத்தும் மேனிலத்தும் நாதனே நல்வேதனே
ஈனரைப்போல் ஏனுனக்கே எல்லை யில்லா வேதனை
என்னோ கொடுமையீ தெங்கனு முள்ளதோ
முன்னோர் கனவிலும் முன்னின தில்லையே

பாதகப் பகைவர்பல பந்தமாய்நிர்ப் பந்தமாய்க்
கோதில்லா மெய்க்கோ வுனையுங் கொல்லமனம் வந்ததோ
குற்றமில்லாமலே கொல்லவும் நீதமோ
கொற்றவ னாணையும் கொல்லுவார் போதமோ

ஆணிகை காலேறி ரத்தம் அருவியாய்ப் பாய்ந்தோடுதே
மேனியெல்லாம் மாறித் தாகம் மிஞ்சிமுகம் வாடுதே
ஐயோஇத் தொல்லையை ஆரிடஞ் சொல்லுவேன்
மெய்யேஇப் புல்லரை மேதினி கொள்ளுமோ?

வாரடிகள் வீங்கியெந்தோ வரைவரையாய்த் தெரியுதே
வாதையெங்ஙன் ஆற்றுவாயென் வயிறுபற்றி யெரியுதே
வல்லோரைத் தெய்வமும் வருத்த வில்லையே
பொல்லா விரோதிகள் புத்திர முள்ளதே

தேகமெல்லாம் நோவு மீறித் தியங்கிநீ கலங்கவும்
ஆசுடைய மாய்ப்பலரும் அவதூறு முழங்கவும்
தேவாஇவ் வேளையோர் திக்குமில் லாமலே
ஆவாநீ போகமுன் அக்கர மானதோ

பாவிகளுக் காகவேயிப் பாரில்பாடு பட்டவா
காவகச் சிலுவைமீது கதறியாவி விட்டவா
கல்லே யெனாதகம் கையுறும் வேளையும்
வல்லே யறாதிரும் வைகுமென் ஆவியும்

ஏசையா உன்இன் முகத்தை என்றுநான்கண் டாறுவேன்
இன்னல்வாரி யின்நடுவில் எங்ஙன்கரை யேறுவேன்?

35. சிலுவைத் தியானம்

'சுத்தனவாரிகி' என்ற மெட்டு

பல்லவி

எத்தனை வேதனை இத்தகை ஈனக் குருசின் மீது
இத்தகை யாவும் ஏது குற்றம் செய்தாய்

துணைப் பல்லவி

அத்தனே ஏன் என்னைக்கை விட்டீரென் றரற்றியொரு
சுத்தவ நாதையாய்த் துன்புற ஏது காரணம் (எத்தனை)

உருவடி

மட்டில்லா மகிமையின்டம் விட்டு மாநிலத்தில் வந்து
எட்டுணையும் இதமின்றி ஏளனமாகிச்
சுட்டெரிக்கவும் முதவாத சட்டகம் நானென்று பற்றிக்
கெட்டதோர் நாமிலும் கேடுறும் கேவலம் எனைமீட்க (எத்தனை)

36.

'புள்ளிக்கலாப மயிற் பாகன்' என்ற மெட்டு

வெள்ளிக்கிழமை வெயில் நேரம்— மனம்
வேகும் கல்வாரிமலை யோரம்— மன
வேதனை மிகக்கடந்த
வேதனை மரத்தறைந்த வீரர் பழிகாரர்
முள்ளின் மகுடம்முடி மேலே— ஒரு
மூங்கிற்கழை கரச்செங் கோலே— அந்த
மூவுலக வேந்த னொரு
பாவமிகு மாந்தனெனச் சிலுவை பெறுங் கொலுவை
ஆணி கைகா லிணைகள் ஏறிப் —பல
அருவிப்பட இரத்தம் பீறி— மிக
அவதிப்படத் துறந்த
அகதித் திறத்திறந்த தேனேபழி நானே
வாரியொரு வடமேயின்னி— உடன்
வளைத்து வருத்த ரத்தங் கன்னிப்—புலி

வருணம்பெற உடம்பு
விரணம் படுந்தழும்பு தடிக்கும்
ஒவ்வோர் நொடிக்கும்

பச்சைப் புண்ணிலே வடிவேலே — உறப்
பதித்த பெருங்கொடுமை போலே— குட்டுப்
பட்டதலை குத்துமொரு
கட்டுமுள்ளை யிட்டதெனச் சிரமோ
அது மரமோ
சுந்தர முகமெல்லாம் எச்சம்— பவ
சோதனைக் காரன்வந்து மெச்சம்— இரு

சோரரொடு பாத சாரி
வீரர்பலர் கூறும்பரி காசம்
அலைகேசம்
தாங்க முடியாப் பசி தாகம்– பச்சைத்
தண்ணீரு மில்லையவர் பாகம்– திருத்
தங்கமேனி வற்றலெனப்
பங்கமாக நிற்றலெனப் பாவம்
பரிதாபம்
பஞ்ச பாதக பரிகாரம்– அவர்
படிவத்தி லைந்து காயம் பாரும்– திருப்
பாதத்தே விழுந்தழுது
பாவத்தை முளங்கழுவ வாரும்
கண்ணீர் வாரும்

37.

'மஞ்சுநிகர் குந்தள மின்னே' என்ற மெட்டு

நெஞ்சமே, நினைந்துபார் முன்னே – நிருதவீரர்
குருசிலார
நிந்தையா யறைந்த மாமன்னே – அந்த
நீதனும்பெரு வேதனையுற
மோது மென்பவ மேதுசெய்குவேன்
நின்று முழங்காலில் நீடியே– அழுதலறித் தொழுதிடுவேன்
நேசமா மகாரை நாடியே
முப்பதின்மேல் மூன்றும் அரையும் – பருவம்வரச் சிலுவையதில்
மூப்ப ராசாரியர் அறையும் – ஒரு
முள்ளின் மாமுடி யெள்ளவே பெருங்
கள்ள ளாயினர் வள்ள லேசுவும்
முன்பு யூதர் சொன்ன மதமே– முடியும் வரை
ஒரு பிடியாய்
முண்டு செய்து கண்ட வதமே
பொந்தியுப் பிலாத்து பதியே– புரையரினம்
இரைய மனம்

போலவே மயங்கும் விதியே — பூதர்
புத்திரத்தையே பெற்றதில்லையோ
எத்திறத்தவர் செற்ற தென்னையே
புல்லியர்க்கே யிந்த ஞாலமே — புனிதமுள
இனியகுண
நல்லவர்க்கோ இல்லை காலமே
சிந்தூர மிகுந்த காயமே— சிந்தாமணியோ
நந்தாவொளியோ
சேயிடை பரந்து பாயுமே — அதைச்
சிந்தை நொந்து மிகுந்து சிந்தியே
அந்தி சந்தி விழுந்து வந்தியே
சீரை யோடிருந்த வண்ணமே— செந்நீர் பருகிப்
பின்னே முழுகச்
சேரும் வெள்ளைத் தூயவண்ணமே!

38.

'தோடுடைய செவியன்' என்ற மெட்டு

பாரின்பவப் பலியாய்ப் பர மாசுதன் பாவிகளை மேவி
சோரும் வெயில் சுரங்கால்களில் சோரவோர் சோரிமிகுமாரி
கூரும்பல குடையாணிகள் கூடமே கொண்டறைய வன்றே
சோரன் போலச்சிலுவை யறையுண்டதும் சுணங்க னென்னாலன்றோ!
முள்ளின்முடி யுமிழ்நீரொடு சேயுடை மூங்கிற்கழை தாங்கி
எள்ளான்முடி யெழுதியெதிர் ஏசவும் ஏதும்புக லாதே
வெள்ளம் போலக் குருதிவழிந் தோடநீர் வேட்கை மிகவிஞ்சி
கள்ளன் போலச் சிலுவையறை யுண்டதும் கயவனென் னாலன்றோ!

பருமன் மிகுமட மாமதப் பாதகர் பட்டினியிற் குட்டிக்
கருமன் விளைக் கர[illegible] கொடு மோதவும் கன்னஞ்செனி கன்னித்
திருகும் வெயிற் பசித[illegible]மும் தீராமல் தேக மெலிவாகத்
திருடன் போலச் சிலுவையறை யுண்டதும் தீயனென் னாலன்றோ!

39. சுவிசேடகன் கிறித்தியானுக்குச் சிலுவையைக் காட்டிச் சொல்வது

'கதர்க்கப்பல் கொடி தோணுதே' என்ற மெட்டு

வசந்தா - முன்னை (ஆதி)

(நாதநாமக்கிரியை - ஆதியிலும் பாடலாம்)

பல்லவி

பவச்சுமை தாங்கி பாரதோ!
பரும்பின்மேல் ஏசுகிரு பாகரன் சமாதியோரம்

துணைப் பல்லவி

பாவியினைப் பாறுந்தானம்
பரிசுத்தாவி யாதீனம்
சீவியப்பிர சாதபானம்
சிறந்த கற்பகங்கானம். (பவச்)

உருவடி

1. வருந்திச் சுமுக்கும் பாவி வகுந்து[1] விரைந்து மேவி
பொருந்திச் சிலுவை சேவி புரண்டுபோம் பாரந் தாவி
புனை[2] மாறும் பண்டை
வினைபாறும்
புத்தகம்பின் பாதை கூறும் (பவச்)

2. தேவமறி தாகங்கொண்டு தேடிவந்த தன்பாய்த் திரண்டு
பாவியுனக் காகவன்று பாடுபட்டுத் தேகம் நைந்த
பலிக்கம்பம் வெற்றிக்
கொடித்தம்பம்
பக்கம் சென்றாலும் பேரின்பம் (பவச்)

---

1. வகுந்து - வழி, 2. புனை - ஆடை

40. உயிர்த்தெழுதல்

'தசரத ராஜ குமாரா' என்ற மெட்டு

கதிரவன் நாளதிகாலே

மரி யானே பரி வாலே விரை வானே

கல்லறை வெறுமையாக் கண்டாள் முளமே
கர்த்த னுயிர்த்தா ரென்று கூறுந் தேவினமே
மெல்லிய லழுதுவின் மீளுறு கணமே
மேசையன் வடிவென்று கொண்டார்

அயல் நின்றார் மரி யென்றார் தமை விண்டார்

ஏசு மறைந்தவுடன் இன்புறு மரியாள்
ஏகினள் சீடரிடம் இமைபுதுந் தரியாள்
தேசுறு மகிழுரை தெரிப்பதற் குரியாள்
தேவ மகிமையறி சீடர்

மகிழ்கூட நடமாடத் துதிபாட

எம்மா வூருக்கிருவர் ஏகினர் சீடர்
இடைவிழ மருவினர் ஏசுவுங் கூடத்
தம்மா லியன்றவரை தகவுரை யாடத்
தமையறியாது வழிபோகும்

பெரு வேகம் கதி ரேகும் இரு ளாகும்

கோமக னுரைகளைக் கோளாளர் தெரிந்தார்
கூறிய போதேயுளங் கொழுந்துவிட் டெரிந்தார்
சேம விடியல்வரச் செல்லுமென் றிரந்தார்
தேசிகனு மிணங்கி யிருந்தார்

ஒரு விருந்தார் முற்று மருந்தார் உருக் கரந்தார்

41. பரமேறுதல்

'நீலகண்ட மகாதேவா' என்ற மெட்டு

இராகம்- வசந்தா தாளம் - ரூபகம்

பல்லவி

மேக வாகன மீதி லேறி
மேசை யாபர மேவி யேறும்

துணைப் பல்லவி

தேக மோடுயிர்த் தெழுந்து மேலே
ஆக நாற்பதும் அருமை நாளே (மேக)

உருவடி

ஆவலாய்ச் சீடர் அவனி நீட
அணைந்து நின்றனர் ஆற்ற வொண்ணுமோ
தேவ தூதரும் இவ்வகை ஏக
திரும்பு மென்றனர் தேற்ற வெண்ணியே (மேக)

42. கிறித்து பிதாவின் வலப்பாரிசத்திலிருந்து பாவிகளுக்காகப் பரிந்து பேசுதல்

'நன்னுபாலிம்ப' என்ற மெட்டு

பல்லவி

மன்னியுந் தேவ மகிமை எகோ வாவே
மாந்தர் பாவமே

துணைப் பல்லவி

கனிதரா மரமே களலுற வேண்டா தொட்டே[1]
இனிதெரு விடுவேன் நான் இனுமொரே ஆண்டுமட்டே (மன்னி)

உருவடி

நிலவுல கேகி நிரப்போடு[2] நிந்தையாகி
நிலந்தலை சாய்க்கவும் நிற்கவும் நேரமின்றிச்
சிலுவையில் வேதனை சிறந்து பாடுபட்டுச்
சிறுமையுடன் மரித்தே தீர்த்தனன் பாவப்பாரம் (மன்னி)

43. மெய்த்தெய்வம்

'அருட்சோதித் தெய்வமென்னை' என்ற மெட்டு

பந்துவராளி - ரூபகம்

நாதாந்தத் தெய்வமென்னை நாடிவந்த தெய்வம்
நம்பனிடத் துயிரொளியும் நண்ணியமெய்த் தெய்வம்

---

1. தொட்டு - தோண்டி, கொத்தி, 2. நிரப்பு - வறுமை.

ஏதேன்றன் இறைவனடனி எதிருணர்ந்த தெய்வம்
ஈசனடி யார்களுமுன் இசைத்தபெருந் தெய்வம்
வேதாந்த சூரியனாய் விளங்குமெய்த் தெய்வம்
வியனிலத்தில் மாமிசமாய் விளைந்துவந்த தெய்வம்
போதாந்தம் படவருக்கே புகன்றளித்த தெய்வம்
பூமியெங்குந் திரிந்துநலம் புரிந்தபெருந் தெய்வம்

மனந்திரும்பும் அரசனைவாய் மலர்ந்தபெருந் தெய்வம்
மறுவுடையு மில்லாமல் வறுமைகொண்ட தெய்வம்
தினந்தினமும் நடந்துபதம் தேய்ந்துளைந்த தெய்வம்
சிரஞ்சாய்க்க இடமின்றிச் சிரமமுற்ற தெய்வம்
இளஞ்சனமாய்ப் பாவிகளை ஏற்றபெருந் தெய்வம்
ஈனருடன் விருந்துண்ட எளியவரின் தெய்வம்
சினஞ்சிறிய வருக்குமிகச் சேவைசெய்த தெய்வம்
சீடரடி கழுவியவர் செருக்கழித்த தெய்வம்

பட்டினியாய்ப் பசிதாகம் பரந்தெழுந்த தெய்வம்
பலமான வாரடியும் பட்டபெருந் தெய்வம்
குட்டிமிகு பாதகரும் குறைவுறுத்த தெய்வம்
கோரமிகுஞ் சிலுவையிலே கொலையுண்ட தெய்வம்
மட்டில்பெரும் பகைவருக்கும் மன்னிப்புரை தெய்வம்
மன்னுயிரைத் தன்னுயிர்போல மதித்தபெருந் தெய்வம்
திட்டியிடச் சோரனுமுன் சிறுமைசெய்த தெய்வம்
திருடனுக்கும் பெரியபர தீசளித்த தெய்வம்

படமுடியாப் பாடுபட்டே பரிதபித்த தெய்வம்
பாவியெனக் காருயிரும் பரிந்தளித்த தெய்வம்
சடமுடனே உயிர்த்தெழுந்த சத்தியமாந் தெய்வம்
தரிசனமுஞ் சீடருக்குத் தந்தபெருந் தெய்வம்
படருமொளி மேகமிசை பரத்தெழுந்த தெய்வம்
பரமவலம் வீற்றிருந்து பரிந்துரைக்குந் தெய்வம்
திடமுறவே மெனையாண்ட திருக்குமர தெய்வம்
திருவருளைச் சிறந்தளிக்கும் திவ்வியமெய்த் தெய்வம்

தானாகித் தனியாகித் தழைத்தபெருந் தெய்வம்
தனக்கெனவா ழாதபெருந் தனிக்கருணைத் தெய்வம்

கோனாகிக் குருவாகிக் கூறுவிக்குந் தெய்வம்
கொடியனெனை யாளுகந்து கொண்டாடுந் தெய்வம்
ஊனாகி யுயிராகி உள்ளமர்ந்த தெய்வம்
உடம்பிறப்பு முறையுமெனக் குவந்தளிக்குந் தெய்வம்
தேனாகித் தெளிவாகித் தெவிட்டறியாத் தெய்வம்
திருவைமன் றாடுகின்ற தெய்வமதே தெய்வம்.

44. நெஞ்சோடு கூறல்

புரிகல்யாணி - சாப்பு

ஏக தேவனே இந்நிலத் தார்பவர்
ஏக மேழையாய் இன்னுயிர் ஈந்ததால்
நீச நாயனை நீயும்பின் பேரின்ப
வாச னான வகைநினை மனமே.

பாடு பட்டிரும் பாரச் சிலுவையிற்
கூடு விட்டிகங் குலையுங் கோமகன்
கேடு கெட்டறக் கீழான வுன்னையும்
வீடு விட்ட விதம்தெரி மனமே.

சாவு பாரத்தைக் கடிதிலகற்றியே
தாவம் நீடுயிர்த் தண்ணீரி லாற்றுமென்
பாவி காணெனப் பரிந்தழைக் கும்பரன்
ஆவ லெண்ணியும் அறிதியோ மனமே.

பொன்னைத் தானியப் பூமியைக் காணடை
தன்னைப் பேணியாத் தற்பரன் எண்மையில்
உன்னை வேண்டவும் உறழுதியோ நெஞ்சே
என்னைப் பேதமை இனைய வருளரே.

தூண்டி லின்பமே துவன்று முலகுனை
ஆண்டு கொள்ளவும் ஆசைப் படுதியே
நீண்ட இன்பமே நின்னை யுறுத்தவும்
வேண்டு மேசுவை விடுவதோ மனமே.

விரும்பி யாவையும் விட்டுனைக் கண்கணீர்
அரும்ப ஏசுவும் ஆனந்த மேந்தினர்

கரும்பு தின்னவுங் காமறு வாரெவர்
இரும்பு கல்பிற இளகுவ மனமே.

மலைவ ருந்துயர் மாயுங் கதிர்ப்பனி
அலைவ ரும்பகை ஆயிரர் என்செய்வர்
தலைவ ருந்திருத் தஸ்பவோ தாளினால்
துலைவ ரும்ஏனம் துன்மன முனக்கே.

45. திருச்சபைக்கு எச்சரிப்பு

சத்திய வேதத் திருச்சபையே

பணி குவையே
தவிர் நவையே கிறித் துவையே
பத்தியின் கனியில்லாப் பாழ்மரம் இனியே
பரசினா லறையுண்டு படர்ந்திடும் வனியே
அத்திமரம் பட்டதே அளியாது கனியே
ஐயா இவ்வாண்டு மிந்த மரமே
எனுஞ் சிரமே
இட உரமே கனி தரமே
பொறுமை யுடன் கிருபை புகழ்பரி தாபம்
பொற்பரன் கொண்டபோதே போக்குவாய் பாவம்
இறுதியில் லடைகுவர் எல்லையில் கோபம்
ஏதுஞ் செய்து மாறாத நீதம்
தெளி வேதம்
ஒரு போதும் இலை போதும்
திருடன்போல் மணவாளன் திடுமென வருவார்
தெரிந்துகொண் டவருக்கே திகழ்பரந் தருவார்
கருடன்கண்ட பணிபோல் கலங்குவர் மருவார்
காலமெல் லாமவர் நிக்கிரகம்
துயர் பெருகும்
கல்லு முருகும் எரி நகரம்

46. கிறித்துவை வேண்டுதல்

காப்பி - ஒற்றை

மகிதலந் தனில்வந்த மனுவேலா - பெரு
மாபாவி களுக்கோர் அனுகூலா
மறமதை வெறுத்தே
திறமுடன் பொறுத்தீர்

மலைமிசை திகழ்வரு மறுஜநுபா – மன
மாயாதி கடந்த மகதேவா
மாமுதல் இறந்தே
பரமதில் சிறந்தீர்

மகிமையில் வருமெழில் மணவாளா – என்றும்
மாறாத தரும குணசீலா
மகிழ்பரந் தருவீர்
புகழ்பெருந் திருவீர்.

47. கிறித்துவின் இரண்டாம் வருகை

சந்தக் குழிப்பு

தான தனன தன தனாதனாதன
தான தனன தன தனாதனாதன
தான தனன தன தனாதனாதன தனதான

பாதி யிரவு புயல் பளீர் பளீர் என
மீது கடவு பர மகா மகா முன
ஓது முறைமை வரு களா களா களா வென அமரோடே

மாதிர முழுவது மடா மடாவென
போதென வுதிருடு பொலீர் பொலீ ரென
வேது படவு மிடி திடீர் திடீ ரென வரு நாளில்

மேதினி கலறைகள் படீர் படீரென
பாதகர் வயிறகம் பகீர் பகீரென
நீதியர் முக முழு நிலா நிலவென நகையாக

கோதுறு நரகெரி குபீர் குபீரென
மீதல சுகவறை மினா முனா வுற
ஏதை யெனையுமுள மெனாதிரேல் ஒளிர்திரு மணவாளா

48. பைரவி - ரூபகம்

பல்லவி

தினகரதீ விரகோடி திகம்பர மாதிரமூடி
திரளாய் வானோர் கூடி தேவபா மணமோடி

துணைப் பல்லவி

தேவரடியவர் சகிதம் தீவிய காகள நாதம்
தேவசுதன் திரு மாரதம் தேசோமயமே வாரிதம் (தினகர)

வானே மீன் உகுபோதே வையகம் பகுரீதே
ஈனே கயவர் கோதே ஏகாங்கி புகவேதே (தினகர)

புனைமங்க ளாகரமே புதுநிலமுங் ககனமுமே
வினைமுதிர் சிங்காசனமே விகசிதம் ஆளுகை சதமே (தினகர)

49. நடுத்தீர்ப்பு

ஏக வலப் பக்கத்தார்க்குச் சொல்வது

பல்லவி

வலமுக மெய்ப் பக்தரின்றே வந்துற வரபோகம்

துணைப் பல்லவி

உலக முண்டானது முதலாய் உங்கட் கமைந்த அரசுற (வலமுக)

உருவடி

நானோ பசிதாகம் பிணி ஆனேன் அபலெனிலும் போனக
பானாதிகள் உவந்தளித்த பாரோப காரிகளீர் (வலமுக)

50. இடப்பக்கத்தார்க்குச் சொல்வது

பல்லவி

இதொடேக இடவீர் ஏதுமின்றி
ஏற்றீர் சாபமே

துணைப் பல்லவி

இதி[1] தன் தூதரோ டிறங்கவே யமைந்த
இறுவா யில்லெரி ஏகி வேயினே (இதொ)

உருவடி

தரா தலமுனமென் சிறாப்பசி மிகவே
பராமுக மிருந்து தரா துண வுடைகள்

1. *இதி - சாத்தான்.*

உறாநொது மல்பிணி யுறாநிலை சிறையில்
வரா திருந்ததென்? அபராதிகளே சொலும் (இதோ)

51. ஆட்டுக்குட்டியானவரின் கலியாணம்

இராகம் - காம்போதி தாளம் - முன்னை

மழவர்மிகுந் தேவசேனை மகிமையுடன் கூடிமண
முழவறைந்தார் திசைகளெல்லாம் முழங்கிடவே மீருலகும்
விழவயரு மென்றேயொரு விளம்பரமுஞ் செய்ததென்னே
அழகுயரும் ஆட்டுக்குட்டி யானவர்க்கே கல்யாணம்!

பரமபதந் தனைவிட்டுப் பாரின்மிக ஏழையாகிச்
சிரமமுடன் பாரந்தாங்கிச் சிரஞ்சாய்க்க இடமின்றி
மரமதிலே மடலேறி மணமகளை மீட்டெழுந்த
அருவரனாம் ஆட்டுக்குட்டி யானவர்க்கே கலியாணம்!

காணிக்கை

கண்ணியத்திற்குரிய அண்ணன் திரு.ஐ.சாமுவேல்
திரு.ஐ.டி.மனோகரன்
மரியாதைக்குரிய நீதியரசர் ஐ.டேவிட் கிறிஸ்டியான்
ஆகியோரின் பெற்றோருக்கு....

Tmt.R.J.Iyadurai	Dr.G.A.Iyadurai Pillai
Matriarch	Homeopath
27.10.1903-11.05.1995	21.09.1898 - 15.08.1967